முரசொலி

வார இதழ் — ஆசிரியர் மு. கருணாநிதி

முரசு 3 | 16—11—56 வெள்ளி | ஒலி 33

"மலையாளியான ஜான் சென்னை கவர்னராவதற்கு காமராசர் (பச்சைத் தமிழர்) சம்மதம் அளித்திருக்கிறார்" (செய்தி.)

'எகத்தாளம்' போடுகிறார்கள்!

★ நூறு சதமும் பொய்மை!
★ அதில் சிறிதுமில்லையே வாய்மை!

ஏன் இந்த நாட்டிலே ஒரு எதிர்க் கட்சி தோன்றவில்லை?

பண்டிதரைத் தலைவராகக் கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சி நன்மைகளைத் தவிர வேறெதையும் செய்யாத காரணத்தினாலா?

இமயமுதல் குமரிவரையுள்ள நிலப் பரப்பில் சுகமும், சுபிட்சமும் பொங்கி வடிவதாலா?

அல்ல; அல்ல!

இங்கு நடைபெறும் காங்கிரஸ் கட்சியின் சர்வாதிகாரம் நாட்டிலே வேறொரு எதிர்க் கட்சியைத் தோற்றுவிக்கவில்லை.

ஆனால் இந்த உண்மையைப் புரிந்து கொள்ள முடியாதது போல் பாசாங்கு வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர் பலர்!

"காங்கிரஸ் கட்சியானது வேறொரு எதிர்க்கட்சி சாதிக்க வேண்டிய காரியங்களையெல்லாம் சாதித்துவிட்டது; அதனால்தான் காங்கிரசைத் தவிர வேறெதற்கும் இந்த நாட்டை ஆளும் யோக்யதை இல்லை!"

❊

"எதிர்க்கட்சியில்லையென்று குறைபடுகிறீர்களா? அது ஒரு குறையேயல்ல. காங்கிரஸ் ஆட்சி நாட்டிலேயுள்ள குறைகளையெல்லாம் அகற்றி எதிர்க் கட்சியின் அவசியத்தையே களைந்தெறிந்துவிட்டது."

—இப்படியெல்லாம் சுருதியமைத்துக் கூறப்படுகிறது, இப்போது!

எதிர்க்கட்சி இல்லாதது ஆளும் கட்சயின் ஏற்றத்தைக் குறிககறதாம்!

எதிர்க் கட்சி வேண்டுமே என்பதற்காக ஒரு எதிர்க்கட்சி வேண்டுமென்பது பேதமையாம்!

—இவ்வாறெல்லாம் கூறத் துவங்கியிருக்கின்றனர், தேசியக் கூடாரத்துப் பிரச்சார பீரங்கிகள்!

அங்கம் ஒவ்வொன்றிலும் அவலட்சணம் தாண்டவமாடும் விகார சொரூபிணி ஒருத்தி!

ஆனால் அந்த அசிங்கம் பிடித்த ஆரணங்கோ கண்ணாடி கண்டறியாதவள்; தன்னை ஒரு பேரழகின் இருப்பிடம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறாள்.

இளமையும் அழகும் கொண்ட வாலிபர்கள் பலர் வருகின்றனர். ஆனால் அவர்களுக்கோ அந்த கோர வடிவத்தின் அருகே சென்று பார்க்கும் தைரியம் வரவில்லை.

தொலைவில் இருந்தபடியே பேசுகின்றனர்; தூர ஓடி விடுகின்றனர்; அந்த வாலிபத் தோழர்கள்! வேறொன்றுமில்லை; அவளது அவலட்சணம் அவர்களை அப்படிச் செய்யச் சொல்கிறது.

ஆனால் அந்த மந்தி அலங்காரியோ வேறு விதமாக நினைக்கிறாள்!

"ஆண்கள் என்னைப் பார்த்து ஓடுகிறார்களா? பாவம்; அவர்களுக்கு பயம்— எங்கே எனது வடிவழகு கண்களைக் குருடாக்கிவிடுமோ, என்று! ஆதவன் முன்னே அகல்விளக்கு பிரகாசிக்க முடியுமா? அதைப் போலவே என் வடிவழகின் முன்னே வருவதற்கு நாணுகிறார்கள்; கோணுகிறார்கள்; கண்புதைக்கிறார்கள்!"

—இப்படி புதுமையும், விசித்திரமும் நிறைந்ததொரு விளக்கம் தந்தாள் விகாரத்தை மட்டுமே உடைமையாக வைத்திருந்த வனிதாமணி!

அவளது அவலட்சணமும், அங்கக் கோணலும் வாலிபர்களைத் தூரத்தியடிக்கிறது; இது உண்மை!

—ஆனால் நிலைக்கண்ணாடியின் முன் நின்றறியாத அந்த மூளி அலங்காரி என்ன நினைக்கிறாள்?

தன்னுடைய அறுபத்தி நான்கு லட்சணங்களும் ஆடவர்களைத் தன்னிடம் வரவிடுவதற்குப் பயப்படுகிறது — என்றெண்ணுகிறாள்!

எவ்வளவு பெரிய மாறுபாடு? எல்லாம் நிலைக்கண்ணாடிப் பஞ்சத்தின் விளைவு!

இதே கதைதான் இப்போது தேசியக் கூடாரத்திலும் நடைபெற்று வருகிறது.

அந்த மூளி அலங்காரி; காளி; காட்டேரி போன்றவளுக்கு நிலைக் கண்ணாடிப் பஞ்சம்!

இந்தத் தேசிய வாதிகளுக்கோ உண்மை நிலையை அறிந்து கொள்ள முடியாத உணர்வுப் பஞ்சம்!

ஆனால் இந்த இருவரும் தாங்களாகவே கற்பனை செய்து கொண்டிருக்கிற எண்ணமிருக்கிறதே; அது முற்றிலும் பயங்கரமானது! உண்மைக்குப் புறம்பானது!

ஆனால் இது சாதாரண வந்தேமாதரத் தொண்டர்களுக்கு மட்டுமல்ல; பெரும் பெரும் புள்ளிகளுக்கே தெரியாமற் போனதுதான் வெட்கப்படத்தக்கதாய் அமைந்திருக்கிறது!

கல்கத்தாவில் நடந்த அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக்கு அறிக்கையொன்று சமர்ப்பித்த ஜகஜீவன்ராம் கீழ்க்கண்டவாறு பேசியிருக்கிறார்:

"இந்தியாவில் ஒரு திறமையான இடதுசாரி எதிர்க் கட்சி அமையாததற்குக் காரணம் ஒரு சோஷலிஸ்டு, எவைகளைத் தன்னுடைய இலட்சியம் என்று கூறமுடியுமோ அவைகளுடன் தொடர்புள்ள சமுதாய போக்குகளும் பொருளாதாரக் கட்டுக் கோப்பும் நாட்டில் உருவாகி வருவதுதான்!"

—இது மத்திய அரசாங்க மந்திரி ஒருவரின் பேச்சு!

ஒரு இடதுசாரி எதிர்க்கட்சி சோஷலிஸ்ட் எவை யெவைகளை இலட்சியமாகக் கொண்டிருப்பானோ; அந்த இலட்சியமெல்லாம் காங்கிரசின் இலட்சியமாக இருக்கிறதாம்!

அதனால்தான் இந்தநாட்டில் எதிர்க்கட்சியே அமையவில்லையாம்!

கதையிலே அவலட்சணம் தன்னை அழகி என்று நினைத்துக் கொண்டு பேசுகிறாள்!

இங்கோ மத்திய அரசாங்க அமைச்சர் முதலாளித்துவத்தின் முதுகெலும்பாக இருந்து வரும் காங்கிரஸ் கட்சியை சோஷலிசத்தை இலட்சியமாகக் கொண்ட ஒரு மாசுமறுவற்ற இடதுசாரி எதிர்க்கட்சியுடன் ஒப்பிடுகிறார்!

இதிலும் ஒரு பேற்றல்—இதுவரை தங்களது லட்சியம் சோஷலிச மாதிரி அல்லது மாடல் என்று தம்பட்டமடித்தவர்கள் இப்போது பொது மக்கள் தூங்குகிறார்களா, அல்லது விழித்திருக்கிறார்களா—என்பதைப் பார்ப்பதற்கோ என்னவோ, தங்களது முடிவு சோஷலிசம் என்றே அறிவித்து விட்டார்கள்!

சோஷலிசமாம்; இவர்களது இட்சியமாம்!

அதனால்தான் இந்த நாட்டில் எதிர்க்கட்சியே அமையவில்லையாம்!

—100 சதவீத முழுப் பொய்யை முலாம்பூசித் தந்திருக்கிறார், ஜகஜீவன்ராம்!

—அவரது இரண்டு கருத்துமே நம்மால் இந்த நாட்டு, மக்களால் ஒத்துக் கொள்ள முடியாத கருத்துக்கள்!

காங்கிரசின் இலட்சியம் சோஷலிசம் என்று கூறப்படலாம்! அந்த வார்த்தை இந்த உலகத்துப் பாட்டாளி வர்க்கத்தையும், முற்போக்கு மதி படைத்தோரையும் ஒரு சேரக் கருதுவதால்!

ஆனால் காங்கிரஸ் இன்று கடைப்பிடிக்கும் பாதையோ நிச்சயம் சோஷலிசம் அல்ல;

அவர்களது பாதை சோஷலிசப் பாதையாக இருந்ததும் கிடையாது; இனி இருக்கப் போவதும் கிடையாது!

❊ தொடர்ச்சி 10-ம் பக்கம்

நாடக மடி!

○❊○

சர்ச்சிலுடைய மகளான சாரா சர்ச்சில் ஒரு நடிகை. ஆமாம்; அந்த நாடாண்டவரின் குமாரி ஒரு நடிகை!

ஒரு சமயம் பத்திரிகையாளர் ஒருவர் அவரை அணுகி "உங்களுக்குச் சேர்ந்திருக்கும் புகழெல்லாம் உங்கள் திறமைக்காகவா? அல்லது நீங்கள் சர்ச்சிலின் புதல்வி என்பதற்காகவா?" என்று கேட்டார்.

அதற்கு சாரா இப்படிப் பதில் கூறினார்:

"இதே பிரச்சினை எனக்கும் தோன்றி ஒருநாள் அப்பாவிடம் சென்று, சாரா சர்ச்சில் என்று பெயர் வைத்துக் கொண்டிருப்பது எனக்கு இடையூறாக இருக்கிறது; நான் பெயரை மாற்றிக் கொள்ளட்டுமா?—என்று கேட்டேன். அதற்கு என்ன பதில் கூறினார் தெரியுமா? திறமையுள்ளவர்கள் எப்போதும் தங்களுக்குள்ள இடையூறுகளை மாற்றிக் கொள்வார்கள் என்றார்."

—இதைக் கூறியதும் கேள்வி கேட்டவர் மௌனமாகி விட்டார்.

'முரசொலி'
இலங்கை, உள் நாடு
ஆண்டு சந்தா 6-0-0
6-மாத சந்தா 3-8-0

சென்னை 16--11--56 வெள்ளி

கோணல் ஆட்சி!

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி வசை பாடுவதில் காட்டப்படும் அக்கரையில் ஆயிரத்தில் ஒரு பங்கு நிர்வாகத் துறையில் காட்டப்படவில்லை.

தேர்தல் முஸ்தீபுகளில் எடுத்துக் கொள்ளப்படும் முன் எச்சரிக்கையான நடவடிக்கைகளில் அணுவில் ஒரு பங்கேனும் இந்த மாநிலத்தின் பொறுப்புள்ள விவகாரங்களில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

—என்பது காமராசரைப் பொறுத்தவரையில் சென்னை மாநிலத்தின் எல்லைப் பிரச்சினைகள் நிலையான சான்றுகளாக இருந்து வருகின்றன.

தேவிகுளம்; பீர்மேடு பகுதிகளை அவர் மலையாள மக்களிடம் கோட்டைவிட்டு நிற்பது இன்றளவும் தமிழக மக்களின் மனதைத் தணலாக்கிக் கொண்டுதானிருக்கிறது.

மலையாளிகளின் நன்மைக்காகப் போராடிக் கொண்டிருப்பவர்; அவர்களது முன்னேற்றத்தையே தன்னுடைய முன்னேற்றமாகக் கொண்டிருப்பவர், பணிக்கர்! அவர் மாநிலச் சீரமைப்புக் குழுவில் அங்கம் வகித்தபோதே எதிர்ப்புக் காட்டியிருக்க வேண்டும், பதவிக்கு வந்த காமராசர்!

ஆனல் மாற்றுக் கட்சியினரை எவ்வாறெல்லாம் மயக்கி விலைக்கு வாங்கலாம்—என்பதிலேயே அவரது கவனமும், கருத்தும் செலவிடப்பட்டதே தவிர; இந்த மாநிலத்தின் நலன் குறித்து அவர் சிறிதளவும் கவலைப் பட்டாரில்லை!

அதனல்தான் பணிக்கர் சென்ற நவம்பர் 1-ம் தேதியன்று இந்த உபகண்ட முழுவதிலும் புதிய மாநில அமைப்பு தினம் கொண்டாடப்பட்டபோது, நேரடியாகவே அவர் டெல்லியிலே நடைபெற்ற ஒரு விழாவிலே கலந்துகொண்டார்.

என்ன விழா அது?

தனிப்பட்டோர் வீட்டுத் திருமணமா?

அல்ல; அல்ல!

கேரளம் புதிய மாநிலமாகத் திகழப்போவது குறித்து டில்லி வாழ் மலையாளிகள் கொண்டாடிய விழா, அது!

அதற்கு நடுவு நிலைமை கொண்ட; பாரபட்சம் சிறிதுமற்ற பெரிய புள்ளிகளைக் கொண்டது என்று சொல்லப்படுகிற மாநிலச் சீரமைப்புக் குழுவின் உறுப்பினரான பணிக்கர் தலைமை வகித்திருக்கிறார்!

டில்லி வாழ் மலையாளிகள் புதிய கேரளம் பிறந்தமைக்காக விழா கொண்டாடினர்கள்—என்பதுகூட பொறுத்தமல்ல!

ஊன்றிப் பார்க்கப் போனல் தேவிகுளம், பீர்மேடு, போன்ற வளம் பொருந்திய பகுதிகள் தங்களுக்குச் சேர்ந்தமை குறித்து மலையாள மக்களின் சார்பாக அவர்கள் பணிக்கருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்—என்றுதான் கூறவேண்டும்!

'இந்தியா'—என்கிற ஒரு கற்பனைப் பிரதேசத்தின் நலனைத் தவிர வேறு பிராந்தியங்களைப் பற்றி சிந்திக்கக் கூடாத ஒருவர்—

தான் ஒரு மலையாளி என்பதை மறந்து விட்டதாகச் சொல்லப்படுகிற ஒருவர்—

டில்லியிலே மலையாளிகள் நடத்திய புதிய கேரளம் பிறந்த கொண்டாட்டத்திற்குத் தலைமை வகித்திருக்கிறார்!

இவர் எப்படி தேவிகுளம்; பீர்மேடு பிரச்சினையை பொது நோக்குடன் ஆராய்ந்திருப்பார்—என்று கருத முடியும்?

'குழுவின் இதர உறுப்பினர்களையும் இவர் தனது சார்பாக—மலையாளிகள் சார்பாக—வசப்படுத்தியிருக்க மாட்டார்—என்று நாம் எப்படி நம்ப முடியும்?

—ஆனல் காமராசரோ இதில் எதையுமே மனத்துட் கொண்டதாகத் தெரியவில்லை. தேவிகுளம்; பீர்மேடு பிரச்சினையைப் பொறுத்தவரையில் அவர் வழக்கம்போல 'மரக்கட்டை'யாகத்தான் இருந்து வருகிறார்.

ஆனல் வட எல்லைப் பகுதியிலும்கூட அவரது கண்மூடிப் போக்கு நீடித்துவருவது குறித்து தமிழர் அனைவரின் மனமும் கலங்கத்தான் செய்கிறது.

இதுவரை திருத்தணிப் பிரச்சினையைப் பற்றி திருத்தமுற தனது கொள்கையைக் கூறாத காமராசர், இப்போது மத்திய அரசாங்கத்து அமைச்சரான படாஸ்கர் வந்து 'மத்தியஸ்தம்' செய்துவைக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்!

இதில் விசித்திரம் என்னவெனில், வடக்கேயிருந்து வரப்போகும் படாஸ்கர் சேலம் மாவட்டத்திலேயுள்ள ஹோசூர்மீது தெலுங்கர் கொண்டாடும் பாத்தியத்தை குறித்தும் ஆராய்ந்து முடிவு கூறப்போகிறாராம்!

ஹோசூர் முடிந்துபோன விஷயம்; முற்றுப்புள்ளி வைக்கப்பட்ட வாக்கியம்!

—அதை மீண்டும் மீண்டும் கிளறிக் கொண்டிருப்பதற்குத் தெலுங்கர்களை அனுமதித்திருக்கிறார் காமராசர்!

ஹோசூரை எந்த அடிப்படையில் தெலுங்கர்கள் கேட்கின்றனர்?

தெலுங்கு மொழி பேசுவோர் அங்கு தமிழ் மொழி பேசுவோரை விட அதிகம் வாழ்கிறார்களா?

அல்லது, ஹோசூர் ஆந்திர மாநில எல்லையோடுதான் ஒட்டியிருக்கிறதா?

இரண்டுமில்லை.

ஹோசூரிலே வாழும் மக்களில் நூற்றுக்கு முப்பது பேர்தான் தெலுங்கர்கள்.

மேலும் ஆந்திர மாநிலத்தின் தென்கோடி மாவட்டமாக இருந்து வரும் சித்தூருக்கும் ஹோசூருக்கும் இடையேகூட தமிழர்கள் அதிகம் வாழும் கிருஷ்ணகிரி மாவட்டம் இருக்கிறது.

—ஆக எந்த அடிப்படையிலும் ஹோசூர் ஆந்திரத்தோடு இணைவதற்கான காரணங்கள் எதுவுமில்லை.

ஆனல் காமராசரோ, ஹோசூரின் உடைமையைத் தீர்மானிப்பதை வடநாட்டு அமைச்சர் படாஸ்கரிடம் ஒப்புவித்திருக்கிறார்.

இது குறித்து காமராசர் கூறியிருக்கிறார்: "இவ்விஷயத்தில் சென்னைக்குப் பலமான ஆதாரம் இருக்கிறது. நியாயமான கட்சியும் கூட!"

—ஹோசூர் சென்னைக்குத்தான் சொந்த மென்பதற்கு பலமான ஆதாரம் இருக்கிறதாம்.

அவ்வாறானல் திருத்தணி, சித்தூர் பகுதிகள் தமிழகத்தில் சேர்வதற்குப் பலமான ஆதாரங்கள் கிடையாதா?

முடிந்துபோன எந்தப் பிரச்சினைகளையும் ஆந்திரர்கள் தங்கள் இஷ்டம்போல் எழுப்பிக்கொண்டிருக்கலாம் என்றால் மீண்டும் அவர்கள் சென்னை தங்களுக்குத்தான் சொந்தம் என்று உரிமை கொண்டாட மாட்டார்களா?

ஏதோ ஒரு சபலம் ஏற்பட்டு தெலுங்கர்கள் சென்னையைப் பாத்தியதை கொண்டாடுவதற்கு காமராசர் ஆட்சியின் இந்தப் போக்கு ஒரு தூண்டுகோலாக அமையவில்லையா?

—இந்தக் கேள்விகளுக் கெல்லாம் பதில் கண்டால் அது பச்சைத் தமிழரின் கோணல் ஆட்சி முறையை விளக்குவதாகத்தான் அமையும்; அதனல்தான் முற்றுப்பெற்ற பிரச்சினைகளை மற்றவர்கள் மீண்டும் மீண்டும் கிளறிக் கொண்டிருப்பதற்கு அனுமதிப்பது முழு மூடத்தனம் என்பதை எச்சரிக்க விரும்புகிறோம்!

★

★ இந்திக்கு ஆதிக்கமா? ★

இந்தி வெறியர்களின் முறை கெட்ட செயல்கள்; தரங் கெட்ட நடத்தைகள் கடல் கடந்த நாட்டினரால் எவ்வாறு நோக்கப்படுகின்றன என்பதை இக்கட்டுரை விளக்கம். இது சிங்கை 'தமிழ் முரசு' இதழிலிருந்து எடுக்கப்பட்டது!

இந்தியப் பார்லிமெண்டின் கூட்டம் இப்போது நடக்கவில்லை. அரசியல்வாதிகள் அனைவரும் தலைநகரைவிட்டு வெளியூர்களுக்குப் போய்விட்டனர். இல்லையென்றால் மாஜி கவர்னர் ஜெனரல் ராஜாஜி ஆங்கிலத்திற்கு ஆதரவாகப் பேசியதற்கு இங்கு ஒரே கூப்பாடு போட்டிருப்பார்கள்.

பண்டித பாலகிருஷ்ண சர்மா எம். பி. ராஜாஜிக்குப் பதிலளிக்கும் வகையில் காரசாரமான அறிக்கை ஒன்று விடுத்தார். அதில் தமிழ்நாடு தவிர மற்றபடி தெற்கே ஹிந்திக்கு ஆதரவு இருந்து வருகிறதென்று குறிப்பிட்டிருந்தார். பாலகிருஷ்ண சர்மா வடநாட்டு ஹிந்தி வெறியர்களின் பிரதிநிதியல்லர். அவர் இதர ஹிந்தி வெறியர்களைப்போல ராஜாஜியை அவ்வளவு கடுமையாகத் தாக்கவுமில்லை. உதாரணமாக, அவர் ராஜாஜியை தேசபக்தியில்லாதவர் என்று கூறவில்லை. தேசத்தின் ஐக்கியம் குலைந்து போகும் ஆபத்து ஏற்பட்டுள்ளதென்று வருத்தப்படவில்லை. ராஜாஜியை தடுப்புக் காவல் கைதியாக வைத்திருக்க வேண்டுமென்றும் சொல்லவில்லை.

பண்டித பாலகிருஷ்ண சர்மா ஹிந்தியில் அற்புதமாக எழுதக் கூடியவர். உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த எம். பி.—க்களில் மற்றவர்களைவிட ஓரளவு 'செல்வாக்கு' பெற்றவர். இதன் காரணமாகவே அவர் ஹிந்தி கமிஷனுக்கு ஒரு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எனவே அவரைப் பொறுத்த மட்டில் ராஜாஜியின் அறிக்கையைப் பற்றி கூறிய கருத்து உண்மையானது என்றே கொள்ள வேண்டும். அவர் தன்னைப் போல மற்றவர்களும் ஹிந்தியின் அழகை அநுபவிக்கவேண்டும் என்றும், ஹிந்தியை இந்தியாவிலுள்ள அனைவரும் கற்றுக் கொள்ள வேண்டுமென்றும் உண்மையாகவே நம்புகிறார்.

பார்லிமெண்டில் வேறு சில கல் நெஞ்சர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ராஜாஜியின் அறிக்கையை அறவே தேவையற்றது எனக் கருதக் கூடியவர்கள். தேசியப் பிரமுகர் என்று கருதப்படும் அங்கத்தினர் ஒருவர் இருக்கிறார். அவர் சமீபத்தில் ஐந்தாண்டுத் திட்டத்தின் பொருளாதார அம்சங்களைப் பற்றிய விவாதத்தில் கலந்து கொண்டபோது ஹிந்தி நம்பர்களை உபயோகிக்க வேண்டுமென்று கோரி 80 நிமிடங்கள் பேசினார். ஹிந்தி மொழிக்கு இந்த விஷயத்தில் தக்க மதிப்பு கொடுக்கவில்லை என்று அவர் கருதுகிறார்.

மற்றொரு அங்கத்தினர் சம்பந்தப்பட்ட மந்திரிக்கு அறவே ஹிந்தி புரியாதென்று தெரிந்திருந்தும் ஹிந்தியிலேயே பேச வேண்டுமென்று—அதுவும் ஆங்கிலம் கலக்காமல் பேசவேண்டுமென்று பிடிவாதம் செய்யக் கூடியவர். ஒரு அங்கத்தினர் ஆங்கிலத்தில் பேச வேண்டுமென்று மந்திரி கேட்டுக் கொண்டால் கூட முடியாது. ஹிந்தியில்தான் பேச வேண்டும் என்ற கூச்சல் பார்லிமெண்டில் போடப்படுவதையும் எத்தனையோ முறை பார்த்திருக்கிறோம்.

கொஞ்ச நாட்களுக்கு முன் ஒரு தென்னிந்திய எம். பி. ஒரு காரியாலயத்தைக் கண்டுபிடிக்க ஒரு மைல் தூரம் சுற்றி வந்ததாக சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தரிடம் கூறினார். "அது எப்படி? எனது காரியாலயம் பார்லிமெண்டு சேம்பரிலிருந்து மிகவும் சமீபத்தில் தானே இருக்கிறது" என்று அந்த உத்தியோகஸ்தர் ஆச்சரியத்துடன் வினவினார்.

"இருக்கலாம், ஆனால் நான் பார்லிமெண்டு கட்டடத்தை இரண்டு முறை சுற்றிக் கொண்டு வரவேண்டியிருந்தது."

"காரியாலயத்திற்குவெளியே பெயர்ப் பலகைகூட இருக்கிறதே."

"ஆம், அது ஹிந்தியில் இருக்கிறது. அந்த மொழி எனக்குத் தெரியாதே" என்று தென்னிந்திய அங்கத்தினர் பதிலளித்தார்.

பார்லிமெண்டிலும், தலைநகரின் மற்ற இடங்களிலும் இம்மாதிரிச் சம்பவங்கள் நடப்பது சர்வ சாதாரணம். ஹிந்தி ஆதரிப்பு இயக்கம் எவ்வளவு உச்ச நிலைக்குப் போயிருக்கிறதென்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

தமிழ் நாட்டிலோ நாட்டின் வேறு பாகங்களிலோ ஹிந்தியைக் கட்டாயமாகத் திணிக்க யாரும் விரும்பவில்லை என்று அடிக்கடி உறுதி மொழிகள் கூறப்படுகின்றன. எனினும் அந்தக் காரியம்தான் சதாசர்வ காலமும் நடந்து கொண்டிருக்கிறது.

காலஞ் சென்ற சபாநாயகர் ஜி. வி. மாவலங்கர் ஒரு சமயம் சொன்னார்: ஹிந்தி 15 ஆண்டுகளில் அரசாங்க மொழியாக வேண்டுமானால் இவ்விதக் காரியங்கள் நடப்பது சகஜம். ஹிந்தியைக் கற்றுக் கொள்ளாதவர்கள் அரசியல் சட்டத்தையே மதிக்காதவர்கள் என்று!

ஹிந்தியைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று இவ்விதம் வலியுறுத்தப் படுவதினாலேயே ஹிந்தி தெரியாதவர்களுக்கு எரிச்சல் ஏற்படுகிறதென்பதில் சந்தேகமில்லை.

காலஞ்சென்ற கோபாலசாமி அய்யங்கார் மந்திரியாகஇருந்த தாலேயே கேள்விகள் போட்ட ஒரு அங்கத்தினருக்கு தமிழில் பதிலளித்தார். முன்னாள் நிதி மந்திரி ஜான் மத்தாய் அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் மலையாள மொழியில் பதில் சொன்னார்.

இதையெல்லாம் அச்சமயத்தில் தமாஷ் என்று கருதினார்கள். ஆனால் அப்போது உருவாகிக்கொண்டு வந்த மொழித் தகராறும், மனக்கசப்புமே இப்போது இன்னும் கடுமையாகி இருக்கின்றன.

ஹிந்தி பேசுவோர்களுக்கும், பேசாதவர்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள குரோதம் கடுமையாகி விட்டதால்தான் ஹிந்திப்பிரச்னைக்குவங்காளம், பஞ்சாப், தமிழ்நாடு இவ்விடங்களில் ஹிந்தி மொழியைத் தீவிரமாகக் கொண்டுவரவேண்டும் என்று சொன்னாலே பலத்த எதிர்ப்புக் காணப்படுகிறது.

அதே சமயத்தில் ஹிந்தி பேசப்படும் பகுதிகளில் ஹிந்தியை அரசாங்க மொழியாகக் கொண்டு வருவதில் கொஞ்சம் நிதானமாக நடந்து கொள்ள வேண்டுமென்று சொன்னால் கூட அதற்கு நிதானமாக கொடுக்கப்பட வேண்டிய இடத்தைக் கொடுக்கவில்லை என்று கருதப்படுகிறது.

சமீபத்தில் ஆங்கிலத்தை சர்வகலாசாலைகளில் வைத்திருக்க வேண்டுமென்று அழுத்தமாகப் பேசிய பிரதம மந்திரி நேருவே, பிறகு ஆங்கிலத்தை வைத்திருக்க வேண்டுமென்று வலியுறுத்துவதனால் ஹிந்தி விஷயத்தில் மெதுவாக இருக்க வேண்டுமென்று அர்த்தமல்லவென்று மற்றொரு அறிக்கை வெளியிட வேண்டியிருந்ததென்பதும் இங்கு கவனிக்கத் தக்கது.

ஹிந்தியைப் பற்றிய தகராறு மிகவும் சிக்கலாகப் போய் விட்டதால் தைரியமாகவும், அந்தரங்க சுத்தியுடனும் சுய சோதனையிலீடுபட்டால் நிலைமை இன்னும் மோசமாகாமல் தவிர்க்க முடியுமென்று சர்க்காரிலும், வெளியிலுமிருக்கும் பொறுப்புவாய்ந்த வட்டாரங்கள் கருதுகின்றன.

உத்திரப் பிரதேசத்தில் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் அனைத்திலும் ஆங்கிலக் கல்வி கைவிடப்பட்டு விட்டபடியால் சர்க்கார் இலாகாக்களுக்கு ஆங்கிலம் தெரிந்த குமாஸ்தாக்கள் நிறைய தேவையிருந்தபோது, சென்னை உட்பட இதர ராஜ்யங்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான இளைஞர்களுக்கு வேலை கிடைத்தும், பெரிய ராஜ்யமான உத்திரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. உடனே அரசியல் சட்டத்தின் கொள்கைகளை நாங்கள் உண்மையாகக் கடைப்பிடித்ததால் கிடைத்த தண்டனை இது—என்று ஹிந்தி அரசியல் வாதிகள் கூச்சல்போடத் தொடங்கிவிட்டனர். உண்மையில் ஹிந்தியை அரசாங்க மொழியாக்குவதில் மெதுவாக இருந்தால் உத்திரப் பிரதேசம், இதர ஹிந்தி பேசும் ராஜ்யங்களில் ஏராளமான இளைஞர்கள் வேலையின்றி இருக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதென்றே சொல்ல வேண்டும்.

தமிழ் நாட்டில் ஹிந்திக்கு எதிர்ப்பு அதிகரித்துள்ளதால் நியாயமான பரிகாரம் தேடுவது கஷ்டமென்றே தோன்றுகிறது. ஹிந்தியைத் தாக்கிப் பேசினால் தமிழ்ப் பத்திரிகைகளில் தனக்கு நல்ல விளம்பரம் கிடைக்குமென்று தென்னிந்திய எம். பி. நினைக்கும் அளவு நிலைமைமுற்றிப்போய்விட்டது. இதன் விளைவாகவே ஹிந்தியை ஆதரித்துப்பேச அவர்கள் பயப்படுகிறார்கள். இன்றில்லா விட்டால் நாளை, நாளைக்கு இல்லா விட்டால் மறுநாள் ஹிந்தி நாட்டில் பரவாமலிருக்கப் போவதில்லை. சொந்த ராஜ்யத்திற் குள்ளாகவே இருக்க வேண்டு மென்ற எண்ணமில்லாத யாருக்கும் ஓரளவு ஹிந்தி தெரிந்திருக்க வேண்டியது அவசியம்.

ஆங்கிலம் 200 ஆண்டுகளாக இந்தியாவில் வேரூன்றி யிருக்கிறது. சர்க்கார் உதவியில்லாமலே 20 அல்லது 30 ஆண்டுகளில் ஹிந்தி நாட்டில் வேரூன்றி விடுமென்றே தோன்றுகிறது. சர்க்கார் வற்புறுத்துகிறது என்பதற்காக அல்லாவிடினும் வேலை கிடைக்கும் என்பதற்காகதென்னாட்டு வாலிபர்கள் ஹிந்தி படித்து வருகின்றனர்.

சென்னை மட்டுமல்ல; ஆங்கிலத்தை இரண்டாவது ஸ்தானத்தில் வைத்துள்ள இதர ராஜ்யங்கள் தேசியத் துறையில் அதன் செல்வாக்கை இழந்து கொண்டிருக்கின்றன.

❊ தொடர்ச்சி 10-ம் பக்கம்

காதலுக்குக் கண்ணில்லை

• தொடர் நாடகம் •

தில்லை வில்லாளன் எம். ஏ.

பொய்யன்: அவன் கண்கள், ஈட்டி முனை போலக் கூர்மையாக இருக்கின்றன.

புலி: வீரனே, விவேகம் நிறைந்தவனே! நேர்மையை அதிகம் செலவிட்டும் விடாதே—தேக்கி வைத்தும் விடாதே—உலகக் காரியங்களில், முரட்டுத்தனம் கூடாது—எதிலும் அவசரமும், பரபரப்பும் வேண்டாம் — அமைதி, அதே நேரத்தில் ஆழ்ந்த சிந்தனை வேண்டும்.

ஆள: சண்டாளன்! பேச்சை காதுகள் கூட கேட்க மறுக்கின்றன.

புலி: இன்னுங்கேள், துள்ளும் உள்ளங் கொண்ட இளங்காளையே! உனக்கு கட்டாயம் வாழ்வில் எதிரிகள் வேண்டும்.

புரட்டன்: மன்னருக்கு, மகத்தான எதிரிகள் மாநிலத்தில் உண்டு.

புலி: எதிரிகள் இல்லாத மனிதனை உலகம் எள்ளி நகையாடிவிடும். எதிரிகளே தனி சக்தியை—வல்லமையை அளக்கும் அரிய அளவுகோலாகும். உன்னைச் சுற்றியுள்ளவரிடம் அன்பு காட்டு—சிரிப்பை நீட்டு—எதுவரை? அவர்கள் உன் கட்டுக்குள் அடங்கி ஒடுங்கிக் கிடக்கும் வரை—கொஞ்சம் எதிர்த்தாலும், சற்றும் ஏறுமாறாக நடந்தாலும் விடாதே—நசுக்கு—அழித்துவிடு!

ஆள: (மனதிற்குள்) பயங்கர வேதாந்தம்! தனக்குத்தானே சவக்குழி தோண்டிக் கொள்ள தக்க நீதிகள் பயின்றிருக்கிறான், இந்தத் தருக்கன்.

பழி: தம்பி, அற நாட்டுக் காவலரின் அறிவுரைகளைக் கேட்டாயா?

ஆள: கேட்டேன், அவ்வழி நடப்பேன்.

புலி: சிறிய விஷயமானாலும், விழிப்போடிரு! அதிக விழிப்போடிருப்பதாகக் காட்டி, பெரிய ஏமாற்றங்களை உண்டாக்கி விடாதே! வாழ்வில் சிங்கம் போல வாழ வேண்டுமானால், நரியின் தோலைப் போர்த்திக்கொள்—உனக்கு, அத்தோல் நன்றாகப் பொருந்தும் — உனக்கு பட்டும் என்ன, உலகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும், அவன் குட்டையாக இருந்தாலும், நெட்டையாக இருந்தாலும், கொழுத்திருந்தாலும் இந்த நரித்தோலாடை பொருந்தும்.

ஆள: தங்கள் போதனைகளை மறக்கமாட்டேன், மன்னவரே!

புலி: இளைஞனே, மறக்க வேண்டியவைகளை நான் நினைப்பதில்லை—கூறுவதில்லை. நடக்க வேண்டியவைகளைப் பற்றித்தான் நான் எப்பொழுதும் பேசுவேன். அதனால்தான் நான் தோல்வி எதிலும் எப்பொழுதும் கண்டதில்லை தோல்வி—அந்த ஒரு தவறை நான் வாழ்வில் செய்ததே இல்லை. மனச்சாட்சி — கொலைகள் பயத்தில் குளறும் உளறு மொழியெனவே கருதுகிறேன், வீரனே! வெற்றித் தோளனே! இப்பொழுது என்னைத் தெரிந்து கொண்டிருப்பாய்.

ஆள: தங்கள் அறிவுரைப்படி இனி ஒவ்வொரு காரியத்திலும் நடந்து கொள்வேன்.

புறங்கூறுவோன்: ஆலயத்திலே காலட்சேபம் புரிவோரெல்லாம் உங்களிடம் பாடம் கேட்க வேண்டும். அவ்வளவு அருமையாக உபதேசம் புரிகிறீர்களே!

புலி: காலட்சேபக்காரர்கள் கிடக்கட்டும் — அவர்களின் எடை எனக்குத் தெரியும். ஆளவந்தா—உன்னை இனி என் குடும்ப உறுப்பினரில் ஒருவனாகவே கருதுகிறேன்.

[அரசனின் அன்பின் அடையாளமாக கரத்தை நீட்டினான் புலிவலன். ஆளவந்தானோ வெருண்டெழுந்தான். பக்கத்திலிருந்த பழிதீர்த்தானின் குறிப்பினால் அடங்கி, ஒடுங்கி, மண்டியிட்டு, மன்னன் கரத்தை, கண்களில் ஒத்திக்கொண்டான்.

மன்னனை விட்டு விலகி வந்து பழிதீர்த்தானும், ஆளவந்தானும் மீண்டும் தனித்துப் பேசுகின்றனர்.]

ஆள: அண்ணா, எந்தக் கரம் என் தந்தையை ஏலம் விட்டதோ, அதனைக் கண்களில் ஒத்திக் கொண்டேன்

பழி: இம்மாதிரி, இன்னும் பல முறை செய்யவேண்டும்.

ஆள: ஐயோ, அப்படியா?

பழி: வாக்குறுதி தந்துள்ளாய், மறந்து விடாதே!

ஆள: அந்த வாக்குறுதி, என்னை உயிரற்ற, உணர்ச்சியற்ற சிலையாக்கிவிடும் போலிருக்கிறதே!

பழி: தம்பி, பழி வாங்க காலம் எப்பொழுது கனிகிறது என்று பார்த்துக் கொண்டிரு.

ஆள: அந்தக் காலக் கனிவை கணத்திற்குக் கணம் எதிர்பார்க்கிறேன்.

பழி: தம்பி, இப்போது மலை செல்வோம், வா.

காட்சி--13

[ஆளவந்தானுக்கு கடைசியாக போதனை புரிகிறான் பழிதீர்த்தான். அப்போதுதான் ஊர்சுற்றிப் பார்க்கச் சென்ற நகைமுகத்தான் தூரத்தில் வந்து கொண்டிருந்தான். அவனைப் பார்த்த பழிதீர்த்தான் மேலும் பேசினான்.]

பழி: தம்பி, அதோ உன் தோழன் வருகிறான். அவனை அறவாழியை விட்டுமட்டுமல்ல, உன் அன்புள்ளத்திலிருந்தும் பிரித்து அனுப்பிவிடு.

ஆள: அறவாழியை விட்டு

✻ 8-ம் பக்கம் பார்க்க.

நாடகம்

காட்சி: 10 தெரு

[வாசகசாலையில் நாலைந்து பேர் படித்துக் கொண்டும் ஊர் வம்பு பேசிக் கொண்டுமிருக்கிறார்கள்]

முத்தய்யன்: என்னய்யா, ஆனைமூஞ்சுப் பிள்ளை வீட்ல பெரிய ரகளையாப் போச்சாமே; அந்தக் கறுப்பனுக்கும் அவருக்கும் கை கலந்துட்டுதாமே!

சிவத்தையான்: கலந்தா என்ன? நல்லாக் கலக்கட்டுமே—ரெண்டு பேரும் காங்கிரஸ்காரங்க! ஒருத்தன் தியாகி! ஒருத்தன் போகி! காங்கிரசு வண்டவாளத்தை அவர்களே பகிரங்கப் படுத்துராங்க!

மூக்கை: கட்சித் தகராறு ஒண்ணுமில்லியாமே! சொந்த விஷயம்னு சொல்லிக்கிருங்க!

சிவ: சொந்தமாவது மண்ணாங்கட்டியாவது; அந்தக் கறுப்பன் கொஞ்ச நாளாவே காங்கிரசை வெளிப்படையாத் திட்டிக்கிட்டுத் திரியருன்! அவனை அடக்குறத்துக்கு மந்திரி கூட மறைமுகமாக ஆள் வச்சுப் பார்த்தாரு; நடக்கலே! தகராறு முற்றிப் போய்த்தான் ஆனைமூஞ்சிப் பிள்ளை வீட்ல அடிதடி வரையிலே வந்து நின்னு இருக்கு!

முத்: ஆமாம்; காங்கிரசுக்குள்ளேயிருந்துகிட்டு இப்படித் திட்டிக்கிட்டு இருக்கிறதை — பிடிக்கிலேன்னு கட்சியை விட்டு விலகி வேற கட்சிக்குப் போறது தானே?

கந்தன்: அதான் நான்கூட அவனுக்கு சொன்னேன்! கறுப்பனைப்போல உழைப்பாளிகளைக் கரம் கூப்பி அழைக்க கம்யூனிஸ்டு கட்சி காத்து நிற்கிறது!

சிவ: நீ வேற......கம்யூனிஸ்டுக் கட்சிதான் "வரவர மாமியார்" கதைக்கு வந்துகிட்டு இருக்குதே! ஒரு நாளைக்கு ஒரு கொள்கை! ஒரு நிமிஷத்துக்கு ஒரு திட்டம் போடுருங்க அதிலே!

மூக்கை: அது மாத்திரமா?... கட்சியிலே இருக்கிற தலைவர்கள், பத்திரிகைகள் எல்லாமே மூன்றாந்தர நாலாந்தர மொழியிலே நடை போடுருங்கன்னு ஊர்ல பேசிக்கிருங்க!

கந்த: யாரய்யா அப்படிச் சொன்னது? எங்க பத்திரிகையிலே அதுமாதிரி மட்டமான எழுத்தே வராது! எங்க தலைவர்கள் வாயிலே கீழ்த்தரமான பேச்சே கிளம்பாது!

மூக்கை: அதெல்லாம் முன்னே! கம்யூனிஸ்டுக் கட்சிக்குக் கொஞ்சம் செல்வாக்கு இருக்கிற போது—சிறிது கண்யத்தை கடைப்பிடிச்சாங்க! இப்ப அஸ்திவாரம் ஆட்டங் கொடுத்தவுடனே, 'அடாதுடி' பேச ஆரம்பிச்சுட்டாங்க! நானே கேட்டேன் இரண்டொரு பிரசங்கங்களை! அப்பப்பா; ரசாபாசமான நடை! என்ன எழுதுவது, என்ன பேசுறதுன்னே தெரியலே அவுங்களுக்கு!...எதுக்கு எடுத்தாலும் பாவம்; அந்த தி. மு. கழகத்து மேலே போயித்தான் முட்டிக்கிருங்க!

கந்த: தி. மு. கழகத்தை நாங்க மாத்திரந்தான் திட்டுகிருேமா? அவுங்களோட சகோதரக் கழகம்இருக்கே—திராவிடர் கழகம்; அது பேசுற பேச்சைக் கேட்டால் தெரியும் உனக்கு! கொஞ்ச நாளைக்குமுன்னே கும்பகோணத்திலே அண்ணாத்துரை கூட்டம்! அதுக்கு முதல்நாள் குருசாமி கூட்டம்!......குருசாமி என்ன சொன்னார் தெரியுமோ? நாளைக்கு அந்த.................(எழுதக் கூடாத வார்த்தை) அவன் வருகிறான்......அவனைப் பேச விடாதீர்கள்—யாருமே கூட்டத்துக்குப் போகாதீர்கள் என்று முழங்கினார்!

மூக்கை: ஓகோ! அவர் பேச்சைக் கேட்டு மறு நாள் அண்ணாத்துரை கூட்டத்துக்கு ஜனங்களே போகலியா?......எப்போதும் போறதைவிட நாலு பங்கு அதிகமாகப் போனாங்களாம்! அமைதியாவே நடந்ததாம், கூட்டம்!... தெரியுமா உனக்கு!

கந்த: கூட்டம் போவார்கள்! அவர்கள் எல்லாம் சினிமாக்காரர்கள்—அதனால் கூட்டம் சேரும்!

மூக்கை: சினிமாக்காரர்களா? சினிமாவிலும்தான் அண்ணாத்துரை கோஷ்டிக்கு இப்போது செல்வாக்கு இல்லை யென்று உங்கள் 'ஜனசக்தி'யில் எழுதியிருக்கிறதே; பிறகு எப்படி ஜனங்கள் போவார்கள்?

சிவ: ஓகோ, முத்தையண்ணே! நீங்க ஜனசக்தியிலே வந்த கட்டுரையைப் பத்தி சொல்றீங்களா?... அய்யோ பாபம்; ஜனசக்தியின் உளறல் என்று பெயர் வைக்கலாம் அந்தக் கட்டுரைக்கு! கட்டுரைக்குத் தலைப்பு என்ன தெரியுமா? பத்து மாதத்தில் தமிழ்ப் படம்! ஒரு கர்ப்ப காலத்தை நிர்ணயித்து அதற்குள் வந்த படங்களைப் பற்றி ஒரு "சிசு" எழுதியிருக்கிறது! முகவையார் எழுதிய "காலம் மாறிப் போச்சு" படம்தான் தலைசிறந்த படமாம்!... தெலுங்கு படத்தைத் தமிழிலே மொழி பெயர்த்து விட்டு தலைகீழ் நிற்கிறார்கள்; ஆலையில்லா ஊரில் இலுப்பைப்பூ சர்க்கரை யென்று சொல்லும் இளித்தவாயர்கள்!

"ஆச்சரியக்குறிதான் ஜமீன்தாரே; கொஞ்சம் வளைந்தால் கேள்விக் குறியாக மாறிவிடும்—நினைவிருக்கட்டும்; அறிவாளுக்கும் கேள்விக் குறிக்கும் அதிக வித்யாசமில்லை!" என்று பாட்டாளியின் குரல் முழங்கியதே "நாம்" என்ற படத்தில்; அந்தத் தொழிலாளர் முரசத்தை மறந்துவிட்டு கெக்கலிப்பு கொட்டுகிருர்கள், பாவம்!...

மன்னனை எதிர்த்து மக்கள் சக்தி எழுந்ததே, சொர்க்க வாசலில்; அதை மறந்து விட்டு சோணகிரிகளாக நின்று சொன்மாரி பொழிகிறார்கள் இந்தக் கம்யூனிஸ்டுகள்! ஒரு படம் எழுதி விட்டார்களாம்; அதுவும் பெரிய வெற்றிப் படத்தில் பாதியளவு வசூலைபே பெற்ற படம்; அதற்கு இந்தக் குதி குதிக்கிறார்கள் அய்யா, பாபம்!..

மூக்கை: அது மாத்திரமா?... தி. மு கழகத்துக்கு இனிமேல் சினிமாவில் இறங்குமுகமாம்! ... ஜனசக்தி எழுதியிருக்கிறது.

கந்த: ஆமாம், அதிலென்ன சந்தேகம்! இனிமேல் எங்கள் புராணிக எழுத்தாளர்களுக்குத்தான் சான்சு!...

சிவ: ஓகோ—புராணிக எழுத்தாளர்கள் எல்லாம் உங்கள் கட்சியா?... நல்ல கம்யூனிஸ்டு கட்சி அய்யா! நீங்களும் உங்கள் பகுத்தறிவும்!......புதிய கருத்துக்கள் பரவ வேண்டுமென்கிறீர்கள் ஒரு பக்கம்! அதே சமயம் புராணக் கருத்துதான் இனி தலை

:: அறிவிப்பு ::

✶

'உதய சூரியனை' நாடகமாக நடத்த விரும்பிப் பல தோழர்கள் கடிதம் எழுதியுள்ளனர். இதை நாடகமாக நடத்தும் அமைப்பில் மாற்றங்களோடு விரைவில் நூல் வடிவில் வருகிறது. அதன் பிறகு அனுமதி பெற்று நடத்திக் கொள்ளலாம் என்று அறிவிக்கிறோம்.

—ஆசிரியர்.

இலட்சிய நடிகர்
எஸ். எஸ். ராஜேந்திரன்

நாடக நிகழ்ச்சிகள் :

17—11—56 : மதுரை. (புதுவெள்ளம்)
18—11—56 : திருநெல்வேலி. (மணிமகுடம்)
19—11—56 : திருநெல்வேலி. (புதுவெள்ளம்)
20—11—56 : செங்கோட்டை. (மணிமகுடம்)
25—11—56 : சென்னை—அண்ணாமலை மன்றம். (மணிமகுடம்)

தூக்கும் என்கிறீர்கள்; நல்ல வியாக்கியானம்!... வயிற்றெரிச்சல் வியாக்யானம்!

மூக்கை: தி. மு. கழக எழுத்தாளர்களுக்காகவே சென்சார் போர்டு கத்தரிக் கோலைத் தீட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறது; நேற்று கேள்விப் பட்டேன்—தெலுங்கு பராசக்தியிலே இரண்டாயிரம் அடிகளை வெட்டி விட்டார்களாம்; அடுத்தபடி தமிழ்ப் பராசக்தியின் இரண்டாவது தணிக்கையிலே அதிக அடிகளை இரையாக்கிக் கொள்வார்களாம்—இப்படி அரசாங்கமே பயப்படுகிறது; அவர்களைக் கண்டு! இந்த பரிதாபத்துக்குரிய ஜனசக்தி சொல்லுகிறது; அண்ணுதுரை கோஷ்டிக்கு இறங்குமுகம் என்று! ஏய் கந்தா—உனக்குத் தெரியுமா? தி. மு. க. நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனுக்கு இப்போது இருக்கிற படங்களை இருபது இருக்கும்— இதற்குப் பெயர் இறங்கு முகமா? ஏய் குரங்கு முகம், பதில் சொல்லேண்டா!

கந்த: ஓய்...என்ன விளையாட்டாப் பேசி, கடைசியிலே வம்பு வளத்து ஆனைமூஞ்சிப் பிள்ளை வீட்டுக் கதையா ஆக்கிடுவீங்க போலிருக்கே!

மூக்கை: அப்புறம் என்ன. தி. மு. க. வின் பலத்தை சினிமாவை வச்சு கணக்குப் போடுறீங்களே; உங்களுக்கு ஏதாவது அரசியல் ஞானம் இருக்குதான்னு கேக்கிறேன்! தி. மு. கழகம், சினிமா, நாடகம் இவைகளையெல்லாம் தன்னுடைய கொள்கையை ஓரளவுக்குப் பிரச்சாரம் செய்கிற சாதனங்களாய் வச்சிருக்கு! சினிமா உலகத்தை ஆக்ரமித்து, அங்கே தன்னுடைய ஆதிபத்தியத்தை உண்டாக்க வேண்டுமென்று திட்டம் போட்டு வேலை செய்கிறது?

கந்த: அது என்னமோ — சமீபத்திய அவர்களது படங்களில் அந்தக் கொள்கைப் பிரச்சாரமும் இல்லை!

மூக்கை: பாத்தியாசிவத்தையா, இவன் பேச்சை?

சிவ: டில்லி சேவடிக்குக் காவடி தூக்குவோன்; தெரிஞ்சும் எப்படிக் கேட்டான்—இந்தக் குப்பை கூளங்களின் தப்புச்செயல்களை ஒப்புக்கொள்ள வேணுமோ?......செப்புக் காசுகூட செஞ்சி நாட்டான் வட சீமைக்குக் கட்டிடமாட்டான்!...''—இதையெல்லாம் எங்கே கேட்டோம்னு கொஞ்சம் ஞாபகப் படுத்திப் பாரப்பா!.........நீறுபூசிய நெற்றி—நேம நிஷ்டை... இதுபோல் வருகிற வசனங்கள் எந்தப் படத்திலே என்பதையும் நினைவு படுத்திப்பார்! கொள்கையை வித்துட்டு காசு சேக்கிறுங்களாம் காசு!... கொள்கையை விக்கிறது; நீங்கதான்! போனமாசம் தயார் பண்ணின கொள்கையை இந்த மாசம் விக்கிறது-இந்த மாசம் தயார் பண்ற கொள்கையை அடுத்த மாசம் விக்கிறது!

கந்த: சரி—சரி, பேச்சு வளருது; நான் போய்ட்டு வர்ரேன்!

(கந்தன் போகிறான்—மற்றவர்கள் தங்களுக்குள் சிரித்துக் கொள்கிறார்கள்.)

[திரைவிழுகிறது.]

காட்சி : 11 தோட்டம்

[இரவு நேரம்—கறுப்பனின் வரவை எதிர்பார்த்து கண்ணம்மா நின்று கொண்டிருக்கிறாள்...அப்போது கறுப்பன் அங்கு ஒளிந்து ஒளிந்து வந்து சேருகிறான்.]

கண்: வந்துவிட்டீர்களா? எவ்வளவு நேரம் உங்களுக்காகக் காத்திருக்கிறேன்...

கறு: கண்ணம்மா!......நான் இரண்டு பெரிய ஆபத்துக்களில் சிக்கிக் கொண்டிருக்கிறேன்—அதனால் தலை மறைவாக இருந்து இங்கு வரவேண்டியதாகி விட்டது—

கண் : ஆபத்தா? என்ன?

கறு : உன்னைக் கல்யாணம் பண்ணிக்கக் கங்கணம் கட்டியிருக்கானே; அந்த ஆனை மூஞ்சிப் பிள்ளை...... அவனை விட்டேன் ஒரு அறை! பல்லு நாலாவது கீழே விழுந்திருக்கும்!... தலையிலேயும் சரியான அடி!...பயலுக்குப் புத்தி வந்திருக்கும்......

கண் : அய்யய்யோ...அவரைப் போயி அடிச்சீங்களா?... அவர் சும்மா விடமாட்டாரே!......இது என்ன பெரிய வம்பை விலைக்கு வாங்கிட்டீங்க!...

கறு: அது மாத்திரமா?...இன்னொரு பெரிய குழப்பத்தையும் ஒரு குடும்பத்திலே உண்டாக்கிவிட்டேன்.

கண்: குழப்பமா? என்ன—புதுசு புதுசா சொல்றீங்க?...யார் வீட்ல குழப்பம்?

கறு: சரி; நீ ஒண்ணும் இப்ப குழப்பமடையாதே—அதெல்லாம் அப்புறம் சொல்றேன். முதல்ல கொஞ்ச நாழி வேற விஷயம் பேசிகிட்டு இருப்போம். ஏன் கண்ணம்மா! என்னை நீ அழைத்த காரணம் யாது?...

கண் : அதிருக்கட்டும் ... ஆனை மூஞ்சிப் பிள்ளையை ஏன் அடிச்சீங்க...?

கறு: அதோ அந்த நிலையைப் பாரு; எவ்வளவு அழகாயிருக்கு! கண்ணம்மா ... சந்திரனிலே களங்கமிருப்பது எதைக் குறிக்கிறது?

கண் : நீங்கள் குடிக்கிறீர்களே; அதைக் குறிக்கிறது!

கறு: என்னது; நான் குடிகாரேன்னு உனக்கு யார் சொன்னது?

கண்: உங்களைப் பத்தி தீர விசாரிச்சுட்டேன் இன்னைக்குப் பகல் முழுதும்!... நீங்க ஒரு குடிகாரர் என்பது பச்சை உண்மை!

கறு: சரி; தெரிஞ்சுக் கிட்டீல்ல; வரும்போது உங்க வீட்டிலேயிருந்து ஒரு பாட்டில் எடுத்துகிட்டு வரக்கூடாது...?

(தொடரும்)

நவம்பர் 20-ம் தேதியன்று வெளி வருகிறது!

எழிலும் ஏற்றமும் குலுங்கும் கலையுலக ஏடு

வெள்ளி வீதி

✻

மு. கருணாநிதி எழுதும்

"என்னைப் பற்றி..."

தொடர் கட்டுரையுடன்!

வெள்ளி வீதி, சென்னை—6.

தயாராகின்றன—

அழகுத் தமிழ் ஏடுகள்!

மு. க. வின்

வெள்ளிக்கிழமை

'முரசொலி'யில் நீங்கள் படித்து மகிழ்ந்த உணர்ச்சிக் காவியம்!

என்றும் உங்கள் நூலகத்தில் இருக்கவேண்டிய அரிய புத்தகம்

✻

வால் நட்சத்திரம்

மாறன், எம். ஏ.

எழுதிய சிந்தனைக்கு விருந்தளிக்கும் சிறு கதைகள்!

விபரங்கட்கு

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் : : திருச்சி

காதலுக்கு...

✽ 5-ம் பக்கத் தொடர்ச்சி

அனுப்பிவிடுகிறேன். ஆனல், அன்பு உள்ளத்தி லிருந்தும்...

பழி: அனுப்பித்தானக வேண்டும். அப்படி அனுப்பாத வரை, உன்னை நான் பார்க்க மாட்டேன்.

ஆள: எனக்குத் தோழனே இருக்கக் கூடாதா?

பழி: பழிச்குப்பழி என்ற எண்ணமே, உன் தோழனுக இருக்கட்டும் — வேறு தோழனே தேவையில்லை!

ஆள: ஆகட்டும், அண்ணு.

[பழிதீர்த்தான் போய்விட்டான். நகைமுகத்தான் மிகவும் நெருங்கி வந்துவிட்டான்.]

நகை: நண்பா, நல்ல விருந்து—வேடிக்கை—விநோதம்—உனக்கு ஏராளமான சேதிகள் கொண்டு வந்திருக்கிறேன். அறவாழி முழுவதும் சுற்றிவிட்டேன். என்ன, நீ ஏன் முகவாட்டத்துடன் இருக்கிருய்? என்ன நடந்தது?

ஆள: (உணர்ச்சியே இல்லாமல்) நாம் இருவரும் பிரிந்திருக்கவேண்டும். நகை.

நகை: அது வீண் செய்திதானே—உண்மையில்லையே!

ஆள: அது முழுக்க முழுக்க உண்மை, நகை — நீ இப்பொழுதே, என்னை விட்டுப் பிரிந்து சென்றுவிட வேண்டும்.

நகை: என்னை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை போலும்—நண்பா, நான் சாதாரணக் குடியில் பிறந்தவனுக இருக்கலாம்—நீ அரச குடும்பத்தில் உதித்தவனுக இருக்கலாம்—அதற்காக என்னை விரட்ட வேண்டாம். உன் தோழனுக இருந்தவன் இனி உன் ஊழியனுக இருக்கிறேன்.

ஆள: (கண் கலங்கியபடி) நகை.........

[தூரத்திலிருந்து பழிதீர்த்தான் அவர்கள் இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தான். ஆகவே, ஆளவந்தான் நகைமுகத்தான் கரத்தைப் பற்றியவன், சட்டென விடுத்து, விலகி நின்ருன்.]

ஆள: (கோபமாக) அது முடியாது—நடக்காது!

நகை: பழங்கால நட்பு முறை இன்னும் பழுதுபடவில்லையென்றே நினைக்கிறேன். உனக்கு வந்த தொல்லை எதுவானுலும், அதில் பாதியை தோழனுகிய நான் அனுபவிக்கத் தயார்.

ஆள: அனுபவி.

நகை: சரி.

ஆள: சரியா — முடியாது — முடியாது — கூடாது—கூடவே...கூடாது!

நகை: அப்படியானுல், பெரும் பிரபு வழிவந்தவன் என்று தெரிந்து கொண்டாயா? அல்லது தங்கக் குவியல் பலவற்றிற்குச் சொந்தக்காரன் என்று அறிந்து கொண்டாயா?

ஆள: (மேலும் கோபமாக) என் பரம்பரைச் சொத்தைக் கண்டுவிட்டேன். இதில் யாருக்கும் பங்கில்லை. கஞ்சனைப் போல காப்பாற்றப் போகிறேன். நீ உடனே, என்னைப் பிரிந்து சென்றுவிடு.

நகை: இரட்டைப் பிறவிகள் போல வாழ்ந்ததை மறந்தாயா?

ஆள: தேவையற்ற நினைவு.

நகை: ஒரு அன்பு மொழிகூட புகலாமல்—கேட்காமலே போகத்தான் வேண்டுமா?

ஆள: ஆமாடா, போ என்ருல் போய்விடு—உன் அன்பையும் உடன் அழைத்துக்கொண்டு!

நகை: உன்னை நல்லவன் — வீரன் — விவேகி என்றெல்லாம் எண்ணினேன். இப்பொழுதுதான் நீ ஒரு கடைமகன் என்று...

ஆள: தெரிந்து கொண்டாயல்லவா—இனிப் பிரிந்து போய் விடு.

நகை: (கண்களில் நீர் வழிய) ஊருக்கு எதும் சேதி உண்டா ஆளவந்தா?

ஆள: ஒன்றுமே கிடையாது—பள்ளிப்பிள்ளை கண்ட கனவுதான் என் பழைய வாழ்வு—என் உண்மையான வாழ்வு இப்போதுதான் தொடங்குகிறது!

[நகைமுகத்தான் சோக முகத்தானுக, தள்ளாடி நடந்து சென்ருன். அவன் சென்ற திக்கையே நோக்கியபடி நின்ருன் ஆளவந்தான். அதற்குள் பழிதீர்த்தான் அவன் பக்கத்தில் வந்து நின்ருன்.]

ஆள: அண்ணு. கோழி தன் குஞ்சை விரட்டியடிப்பதைப் போல என் அருமைத் தோழனை—ஆருயிர் நண்பனை துரத்திவிட்டேனே — இப்பொழுது திருப்திதானே?

பழி: தம்பி, என் பதுங்குமலைக் கோட்டையை விட்டு இன்றே புறப்படு. மறந்துவிடாதே——தந்தையின் கட்டாரியை என்று காண நேருகிறதோ, அன்றே காரியத்தை முடித்துவிடு.

ஆள: உறுதியாகச் செய்வேன்—கட்டாரி காணும் நாளே, காவலனின் இறுதி நாள் இதனைக் கவனத்தில் வைத்துக்கொள் அண்ணு.

[தனித்து நிற்கிருன் ஆளவந்தான். அவன் உள்ளத்தில் பெரும் புயல் அடித்தபடி இருக்கிறது.]

ஆள: என் உள்ளத்தில் இரக்கம் என்ற பண்பு இருந்தால் எடுத்தெறிந்து விடுகிறேன். அன்பு இருக்குமானுல் அழித்து விடுகிறேன். இதயத்தோடு ஒட்டிக் கொண்டு வர மறுத்தாலும், கத்தி கொண்டு அறுத்தெடுத்து வீசியெறிகிறேன் வெளியே—அந்த இடத்தில் பழிக்குப் பழி என்ற வெறி வேகத்தை குடியேற்றுகிறேன். பழிக்குப் பழி! ஆம்; நீதான் என் தோழன்—காதலி எல்லாம்! என்னுடனே எப்பொழுதும் இரு—பக்கத்திலேயே படுத்திரு—குதிரையில் சென்ருல் கூடவே வா—நான் களைத்தால், இசை பாடி மகிழச்செய் — நான் மகிழ்ச்சியோடிருந்தால், நீயும் கூடவே களியாட்டம் போடு—கனவு கண்டால், இரா நேரத்தில் பேசு — ஆம், என் தந்தை மாண்ட மர்மத்தைக் கூறு. (வாளை உருவிப் பிடித்தபடி பேசுகிருன்) பழிக்குப் பழி—நீதான் என் கடவுள்—என் உறுதிமொழியை ஜுவாலையோடு எரியும் தீயிலே தேவதைகளை விட்டுப் பொறிக்கச் செய். என் தந்தையின் மரணக் கதையை கேட்ட நிமிடத்திலிருந்து என்னை மறந்தேன் — நட்பை மறந்தேன்—நல்லவர் தொடர்பை மறந்தேன்—நல்ல பண்புகளை மறந்தேன் — ஏன், காதலை, கட்டிளங்குமரி வரை—இல்லை, உலகத்திலுள்ள அழகுப் பொருள்கள் அத்தனையும் மறந்தேன்! மறந்துவிட்டேன்! பழிக்குப் பழி! நீ ஒன்றே என் நினைவில் நிலைத்திருக்கிருய். [வாளை உறையில் போட்டுவிட்டு, அவன் அரண்மனை நோக்கி நடக்கிருன்.]

காட்சி--14

[நகைமுகத்தான் தனித்து நின்று பேசுகிருன்.]

நகை: ஆளவந்தான்—என் ஆருயிர்த்தோழன்—அவன் நெஞ்சில் நஞ்சை யூட்டிவிட்டனர்—அதனுல்தான் என்னை வெறுத்துப் பேசினுன் — அவனுக்கு, எந்த துன்பம் வருமோ — நான் அழகாபுரி போகப் போவதில்லை. இங்கேயே தங்கி, என் தோழனுக்குத்தோன்ருத் துணையாக இருக்கப் போகிறேன். என்னை இங்கு யாருக்கும் தெரியாவிட்டாலும், தற்காப்பாக மாறு வேடத்திலேயே தங்கியிருக்கப் போகிறேன்.

காட்சி--15

[வறுமையால் தாக்கப்பட்ட மக்கள் கூட்டம் ஒன்று அரண்மனை வாயிலில் தோன்றுகிறது. மன்னனைக் காண வேண்டும்; துயர் துடைக்க வழி தேட வேண்டும்—இந்த நோக்கோடு சூழ்ந்து நின்ற அவர்களை, அரண்மனைக் காவலாளர்கள் தடுத்து நிறுத்துகின்றனர். நாட்டின் தலைவனைச் சந்திக்க அனுமதி மறுக்கப்பட்ட பின்னும் பொறுப்பார்களா, மக்கள்? ஒரே குழப்பம்! அப்போது அரண்மனை வாயிலை நோக்கி வருகிருள் மன்னனின் தங்கை. குயில் குரலாள். கொதித்து நின்ற மக்களை நோக்குகிருள். விபரம் ஏதும் புரியாத காரணத்தால், கூட்டத்தில் ஒருவனை அழைக்கிருள். அந்த 'ஒருவன்' நமக்கு முன்பே அறிமுகமானவனைப் போல் தோன்றுகிறதே! ஆமாம்; ஆமாம்! அவன்...அவன்தான் நகைமுகத்தான்!]

(தொடரும்)

நவம்பர் 18:

காமன்வெல்த்-எதிர்ப்பு தினம்

○✽○

சர்வ கட்சித் தலைவர்களின் வேண்டுகோள்

மனித உரிமைக்கும், உலக நாடுகளின் அமைதியான வாழ்வுக்கும் எதிராக எகிப்துமீது பாய்ந்து அட்டூழியங்களைப் புரிந்த பிரிட்டனின் போக்கினைக் கண்டிக்கும் அறிகுறியாகப் பிரிட்டிஷ் காமன்வெல்த்திலிருந்து இந்தியா வெளியேற வேண்டுமென்று நேரு சர்க்காரை வற்புறுத்தவும், அதற்கான செயல் முறைகளில் ஈடுபடுமாறு தூண்டவும் தமிழ் நாடெங்கும் நவம்பர் 18-ம் நாளன்று சர்வகட்சிகளும் ஒன்று சேர்ந்து பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள் ஆகியவைகளை அமைதியாக நடத்தி, நிறைவேற்றப்படும் தீர்மானங்களை இந்திய அரசியலாருக்கு அனுப்பிவைக்குமாறு தமிழ்ப் பெரு மக்களைக் கேட்டுக்கொள்ளுகிருேம்.

எச். டி. ராஜா எம். பி, தலைவர், காமன்வெல்த்—எதிர்ப்பு லீக்

என். வி. நடராசன், துணைப் பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

ப. ஜீவானந்தம் எம். எல். ஏ, கம்யூனிஸ்டுக் கட்சி

ஏ. சுப்பிரமணியம், காரியதரிசி, தமிழ் நாடு பிரஜா—சோஷலிஸ்டுக் கட்சி

கா. மு. ஷெரீப், தமிழ் அரசுக் கழகம்

எஸ். கிருஷ்ணமூர்த்தி, உப தலைவர், தமிழ் நாடு தொழிற் சங்கக் காங்கிரஸ்

பி. எஸ். சின்னதுரை, தலைவர், பிரஜா சோஷலிஸ்டுக் கட்சி

சி. பா. ஆதித்தன்.

என்ன காரணம், இயம்புவீர்?

தண்ணீர் ஒரு பானையில் கொண்டு வரச் சொல்லி அதைப் பருகி மகிழ்ந்தார்களாம்!

அப்போது பேசிய பம்பாயின் மாஜி-முதல் மந்திரி பி. ஜி. கெர் " இது தீண்டாமையை அகற்றி விடும்; ஹரி ஜனங்களுக்கும் ஜாதி ஹிந்துக்களுக்கும் உள்ள பேதத்தை ஒழித்து விடும்!" என்று பேசினாராம்!

அன்று காந்தி ஜெயந்தி விழாவிலே கூடியிருந்த ஜாதி இந்துக்கள் ஆனந்தமாக உட்கார்ந்து கொண்டிருந்தனர்!

ஆனால் ஹரி ஜனங்களோ நகர் முழுவதும் சுற்றி, குழாய் தேடி, தண்ணீர் பிடித்து. அதை வழியெல்லாம் சுமந்து வந்து அவர்களுக்குக் கொடுத்திருக்கின்றனர்.

உழைப்பதற்கு ஹரி ஜனங்கள்! உட்கார்ந்தபடியே சாப்பிடுவதற்கு ஜாதி ஹிந்துக்கள்!

—இந்தத் தத்துவம்தான் அன்று பம்பாயிலே நடந்த சம்பவத்தால் விளக்கிக் காட்டப் படுகிறது!

ஆனால் இது தீண்டாமையை ஒழித்துவிடும்; ஜாதி இந்துக்களுக்கும் ஹரி ஜனங்களுக்கும் இடையே உள்ள பேதங்களைப் போக்கிவிடும் என்று கூறியிருக்கிறார், பம்பாயின் மாஜி மந்திரி பி. ஜி. கெர்!

நினைவிலிருக்கட்டும்—ஜகஜீவன் குறிப்பிட்டாரே ஒரு இடது சாரி சோஷலிஸ்ட் நினைக்கின்ற முற்போக்குக் கருத்துக்களையெல்லாம் கொண்டது காங்கிரஸ் கட்சி யென்று; அந்தக் காங்கிரஸ் கட்சியிலே இந்த பி. ஜி. கெர், மற்றும் அன்றைய தினம் 'ஹரிஜனங்களை' தண்ணீர் கொண்டு வரச் சொல்லி களைப்பு தீர்ந்து மகிழ்ந்த அனைவருமே முக்கியமானவர்கள்!

● ● இவ்வளவுதானா? இன்னுமிருக்கிறது இந்தப் போலிகளின் வேஷம் கலைக்கும் வலிமைபெற்ற உண்மைகள்!

● கல்கத்தாவிலே கூடிய காங்கிரஸ் இந்த நாட்டின் பொருளாதார நிலைமையை விமர்சித்தும்; எதிர்காலக் கொள்கையை விளக்கியும் ஒரு தீர்மானம் நிறை வேற்றியிருக்கிறது.

'சிக்கனமாயிருங்கள்! செலவு செய்யாதீர்கள்! அதிகம் சாப்பிடாதீர்கள்! உற்பத்தியைப் பெருக்குங்கள்!' —இதுதான் அந்தத் தீர்மானத்தின் மூலமந்திரம்!

எவ்வளவு குறைத்துச் சாப்பிட முடியுமோ அவ்வளவு குறைத்துச் சாப்பிடுங்கள்—என்று உபதேசம் செய்திருக்கிறார் பண்டித பந்த்!

சாப்பாட்டைக் குறைத்துக் கொள்ள வேண்டுமாம்!

அடிவயிற்றை இறுகப் பிடித்துக்கொண்டே உற்பத்தியை பெருக்க வேண்டுமாம்!— இந்த 'சோஷலிஸ்ட்களின்' புதிய கண்டு பிடிப்பு இது!

இதிலே இன்னொரு முக்கியமான பகுதியும் இருக்கிறது.

இப்போது 30 சத வீதம்விலைவாசி உயர்ந்திருக்கிறது!

இதற்குப் பல காரணங்கள் உண்டு!

நாணயச் செலாவணி கட்டுப் படுத்தப்படவில்லை.

அதைப் போலவே வணிக முதலைகளின் சரக்குப் பதுக்கலும் கட்டுப் படுத்தப் படவில்லை.

அதனால்தான் மயிலே, மயிலே இறகு போடு — என்னும் தோரணையிலே பண்டித நேரு வியாபாரிகளையெல்லாம் நோக்கி, "எந்தக் காரணத்தைக் கொண்டும் விலைகளை யெல்லாம் உயர்த்தாதீர்கள்! தேசத்தின் நன்மையைக் கருதியாவது விலைகளை உயர்த்தாதீர்கள்!" என்று கெஞ்சியிருக்கிறார்!

ஒரு நாட்டின் பிரதமர், ஆட்சிச் சக்கரத்தின் ஒவ்வொரு சிறு அசைவையும் கட்டுப்படுத்திக் கொண்டிருப்பவர்—வியாபாரிகளைப் பார்த்து விலைகளைக் குறையுங்கள் என்று கெஞ்சியிருக்கிறார்!

இப்போது 30 சதவீதம் விலைவாசி உயர்ந்திருக்கிறது என்று முன்னமே குறிப்பிட்டோமல்லவா?

அதை ஈடு செய்து விலை உயர்வைத் தடுப்பதற்காக 35 சத வீதம் உணவு உற்பத்தியைப் பெறுக்குவதென்று முடிவு செய்திருக்கிறார்கள்! விலை உயர்ந்து விட்டது; அதனால் உற்பத்தியையும் விலை ஏற்றத்தையும் தடுக்கப் போகிறார்களாம்!

● ● ● ● இதுபோன்றதொரு சம்பவம்தான் சமீபத்தில் இலங்கையில் நடைபெற்றது.

சரக்குகளைப் பதுக்கிவைக்கும் பண முதலைகளின் கொடுமை காரணமாக விலை உயர்வு இலங்கைத் தீவையே பயமுறுத்திக் கொண்டிருந்தது.

அதனால் இலங்கை அரசு என்ன செய்தது?

பதுக்கல் வியாபாரிகளைப் பார்த்து, 'அய்யா, அய்யா! தயவு செய்து சரக்கைப்பதுக்கி வைத்து விலையை உயர்த்தாதீர்கள்!' என்று வேண்டுதல் விட்டதா?

இல்லை!

அத்யாவசியமான உணவுப் பொருள்களைப் பதுக்கி வைத்தால் அவர்களுக்கு சிறைத் தண்டனை கட்டாயமாக்கப்படும் என்று இலங்கை மந்திரி சபை முடிவு செய்திருக்கிறது!

பண முதலைகளைப் பார்த்துப் பல்லிளிக்கவில்லை பண்டார நாயகாவின் அரசாங்கம்!

பொது மக்களின் எதிரி என்று கருதப்படுபவர்கள் முன்பு சட்டத்தின் கூரிய முனை நீட்டப்படுகிறது, அங்கே!

ஆனால் இங்கோ அவர்களுக்கு முன்பு நமஸ்காரம் செய்கிறார், பண்டிதர்! பதுக்கல் வியாபாரிகளின் கொட்டத்தை அடக்காமல் உற்பத்தியைப் பெருக்குவதற்கு உபாயத்தைத் தேடி அலைகிறார்!

● நினைவிலிருக்கட்டும்; பண முதலைகளைக் கண்டு பயப்படும் இந்தப் பண்டிதர்தான் ஜகஜீவன்ராம் குறிப்பிட்டாரே; அந்த இடதுசாரி சோஷலிஸ்டின் இலட்சிய மாளிகையான காங்கிரஸ் கட்சியின் சிற்பி!

● ● ● ● அன்புள்ள தோழர்களே, இப்போது சொல்லுங்கள்! இருதயத்தில் கைவைத்துப் பார்த்துப் பிறகு சொல்லுங்கள்—

ஜகஜீவன்ராம் சொல்வதைப் போல, ஒரு சோஷலிஸ்டின் இலட்சியம்தான் காங்கிரசின் இலட்சியமாக இருந்து வருகிறதா?

ஒரு உண்மையான சோஷலிஸ்ட் செய்ய விரும்புவதைத் தான் காங்கிரசும் செய்து வருகிறதா?

அவ்வாறானால்; தனது நண்பர்களுக்கெல்லாம் மந்திரிசபையில் இடம் வேண்டுமென்று சொல்கிற கோபால் ரெட்டியார் ஒரு இடது சாரி சோஷலிஸ்டா?

ஊரெல்லாம் ஹரிஜனங்களை அலையவிட்டு, தண்ணீர் கொண்டுவரச் சொல்லி ஆணையிட்டு, அதை உட்கார்ந்த இடத்திலிருந்து பருகி, ஆனந்தித்த 'அதிகப் பிரசங்கிகளும்' சோஷலிஸ்டுகளா?

முதலாளிக்கு மட்டும் வெளி நாட்டுக் கார் உபயோகிக்கும் உரிமையளித்த இந்த அரசாங்கம் சோஷலிச அரசாங்கமா?

பதுக்கல் வியாபாரிகளைத் தண்டிக்காமல் அவர்கள் முன்னே பயந்து பல்லிளித்துக் கொண்டிருக்கும் பண்டிதர் ஆட்சி ஒரு சோஷலிஸ்ட் ஆட்சியா?

—இப்படிக் காங்கிரஸ் கட்சியின் ஒவ்வொரு அசைவிலும் 'சோஷலிசம்' ததும்பி வழிவதால்தான் இந்நாட்டில் எதிர்க்கட்சி ஏற்படுவதற்கு அவசியமே ஏற்படாமல் போய்விட்டதா?

அல்ல தோழர்களே; அல்ல! இந்த நாட்டில் எதிர்க்கட்சி தோன்றாததற்கு அதுவல்ல காரணம்—

காங்கிரஸ் கட்சி நடத்தும் எதேச்சாதிகாரம்தான் காரணம்; எதிர்ப்பவனை வாழ விடாத பொறாமையும் ஆதிக்க உணர்ச்சியும்தான் காரணம்!

அது மட்டுமா? இந்த நாட்டை ஆளுவதற்கு நாங்களே

❋ தொடர்ச்சி 12-ம் பக்கம்

திராவிடத்தின் கலாச்சாரத் தூதுவராக மலாயா சென்றிருந்த நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்கள் சென்ற 13-ம் தேதி யன்று தாயகம் திரும்பினார். ஏராளமான தோழர்கள் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அவருக்கு நல்வரவு கூறினர். அவ்வமயம் நடிப்பிசைப் புலவர் தமது துணைவியாருடனும், குழந்தைகளுடனும் தோற்றமளிக்கும் காட்சி, இது!

இதுவா சோஷலிசம் ?

✻ 2-ம் பக்கத் தொடர்ச்சி

ஏனெனில் முதலாளிகள் முகம் சுளிக்காமல் நடந்து கொள்வதைத்தான் அவர்கள் கொள்கையாகக் கொண்டு நடந்து வருகிறார்கள்.

இதற்குப் புது உதாரணங்கள்—ஊழலுக்கு; அவர்களது முதலாளித்துவ மனப்பான்மைக்கு ஏராளமாகக் கிடைத்திருக்கின்றன.

●● உதாரணமாக, பம்பாய் நடிகை சோபனா சமரத் என்பவர் ஜெர்மன் நாட்டிலிருந்து தனக்கு பிரத்யேக 'மெர்சிடெஸ் பென்ஸ்' கார் ஒன்று வரவழைத்துக் கொள்ள அரசாங்கத்திடம் அனுமதி கேட்டிருந்தார்.

அதற்கு அரசாங்கத்திடமிருந்து, '' இப்போது வெளிநாட்டிலிருந்து கார்கள் தருவிப்பது தடுக்கப் பட்டிருக்கிறது.'' என்று பதில் வந்தது.

ஆனால் சேட் காந்திலால் மொரார்ஜி தேசாய் என்னும் பெரிய முதலாளி ஒருவர் இப்போது ஜெர்மன் நாட்டிலிருந்து இரு 'மெர்சிடெஸ் பென்ஸ்' கார்களை இறக்குமதி செய்து உபயோகித்து வருகிறார்!

—இந்த விபரங்களையெல்லாம் தந்திருக்கிறது 'பிலிமிண்டியா' ஏடு!

சேட் காந்திலால் மொரார்ஜி தேசாய் அரசாங்கத்தையே தன் வயப்படுத்திக் கொள்கிற அளவுக்குப் பணம் படைத்திருந்ததால் அவர் ஒரு சாதாரண பிரஜைக்குரிய உரிமைகளைவிட அதிகம் பெற முடிந்திருக்கிறது, இந்த சோஷலிச ஆட்சியில்!

—இது ஒரு சம்பவம்தான்! இதைத் தவிர அந்தக் கூடாரத்திலே பெரிய புள்ளிகள் என்று பெயர் பெற்றிருக்கிற மனிதர்களை ஆராய்ந்தால் 'ஊழல்' உலகமெல்லாம் நாற்றமெடுத்து விடும் போலிருக்கிறது!

உதாரணம்: கோபால் ரெட்டியார்!

இவர் ஆந்திராவின் ஆதவனாக முன்னம் இருந்தவர்! ஜக ஜீவன்ராம் குறிப்பிட்டாரே, அந்த சோஷலிச இலட்சியத்துக்காகப் பாடுபடுவர்களில் இவரும் ஒருவர்தான்!

தற்சமயம் ஆந்திராவிற்கு சஞ்சீவரெட்டி பிரதமராக வந்திருக்கிறார்.

'அவரது மந்திரி சபையில் நீங்களும் ஒரு அமைச்சராகச் சேந்து கொள்கிறீர்களா ?'— என்று கோபால் ரெட்டியார் கேட்கப்பட்டாராம்!

முடியும்; அல்லது முடியாது என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிடவில்லை, அவர்!

ஒரு சில நிபந்தனைகளை விதித்திருக்கிறார், அவர்!

என்ன அவை?

இந்த மந்திரிசபை இந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்; அல்லது இன்னின்ன இலட்சியங்களை மேற்கொள்ள வேண்டும்—என்பதா?

அல்ல; அல்ல!

"நான் மந்திரிசபையில் இடம் பெற வேண்டுமென்றால், நான் குறிப்பிடுகின்ற சிலரும் மந்திரி சபையில் சேர்த்துக்கொள்ளப் படவேண்டும்!"

—இது கோபால்ரெட்டியாரின் கோரிக்கை!

மந்திரிசபையில் அவர் சேர வேண்டுமென்றால் அவர் குறிப்பிடுகிற அவரது நண்பர்களும் அதில் மந்திரிகளாகச் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமாம்!

விசித்திரமான நிபந்தனை!

எந்த ஜனநாயகவாதியும் வாய்விட்டுச் சொல்லக் கூசுகிற நிபந்தனை!

பாவம்; மந்திரி சபையை நண்பர்கள் சபையாக மாற்ற நினைத்திருக்கிறார், கோபால் ரெட்டியார்!

நான் மந்திரியாக வேண்டுமெனில் இதர திறமையானவர் வர்களும் அந்த மந்திரி சபையில் இடம் பெற வேண்டும்—என்று கூடியிருப்பாரேயானால் அது பெருமைப்படக் கூடியதாய் இருந்திருக்கும்!

திறமையுள்ளவர்களைக் கேட்கவில்லை அவர்; நண்பர்களைக் கேட்டிருக்கிறார்!

மந்திரி சபையை ஒரு பொழுதுபோக்கு 'கிளப்' என்றெண்ணிக் கொண்டு, அங்கே சிரித்துப் பேசி, கொஞ்சி விளையாடிட உற்ற தோழர்கள் தேவை என்று முறையிட்டிருக்கிறார்!

—நினைவிலிருக் கட்டும்; ஜகஜீவன்ராம் குறிப்பிட்டதைப் போல 'இந்த நாட்டிலே ஒரு சோஷலிஸ்டு எவைகளைத் தன்னுடைய இலட்சியம் என்று கூற முடியுமோ, அவைகளுடன் தொடர்புள்ள சமுதாயப் போக்குகளையும், பொருளாதாரக் கட்டுக் கோப்பையும், உருவாக்கி வருகிறதே காங்கிரஸ் கட்சி; அதன் முக்கியஸ்தரில் ஒருவர்தான் இந்தக் கோபால ரெட்டியார்!

●● இந்த அசல் சோஷலிச வாதிகள் (?) இன்னும் என்னென்ன வேடிக்கைகள் செய்து வருகிறார்கள் தெரியுமா?

● பம்பாயில் காந்திஜெயந்தி விழா நடைபெற்றது.

ஏராளமான 'காந்திக் குல்லாய் வீரர்கள்' அங்கே கூடியிருந்தார்கள்.

'ஹரிஜன்' என்று சொல்லப்படுகிற தாழ்த்தப்பட்ட மக்கள் காந்தியின் பிரியத்திற்கு ஆளானவர்கள் அல்லவா?

அதற்காக அவர்களைக் கௌரவிக்க வேண்டி தேசிய வீரர்கள் ஒரு வேலை செய்தார்கள்!

எல்லா ஹரிஜன மக்களையும் அழைத்து, ஊரிலுள்ள குழாய்களிலிருந் தெல்லாம்

✻ தொடர்ச்சி 9-ம் பக்கம்

18—11—56 ஞாயிறு காலை 9-30 மணிக்கு

சென்னை கோகலே மண்டபத்தில்

சிறப்புக் கூட்டம்

○●○

தலைவர்:

தமிழவேள் பி. டி. இராசன், எம்.எல்.ஏ.

சொற்பொழிவாளர்:

அறிஞர் அண்ணா

பொருள்: "தோழமை"

நன்கொடை: ரூபாய் ஒன்று.

—நண்பர்கள் கழகம்.

பிறைவானம்....

✻ 11-ம் பக்கத் தொடர்ச்சி

தில் காட்டு மரங்கள் எரிந்து கொண்டிருந்தன!

"அதுவா, அதுதான் நெருப்பு தம்பி!" என்றான் பூபதி!

"நெருப்பா? அதைக் கிட்டப் போயி பாக்கலாமா" என்றான்.

"ஐயையோ! ரொம்ப எட்டியிருக்கு! வேண்டாம் வேண்டாம்!" என்றான் பூபதி! ஆனால், அந்தப் பிஞ்சு நெஞ்சோ பக்கத்திலேயே தீயைக் காண முடிவு செய்திருந்தது அவனுக்கு அப்போது தெரியாது!

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. மருதவாணரைப் படுக்கையில் கிடத்தி விட்டு பத்தாவது தினமும் வந்து சேர்ந்தது.

தருமுவின் பிடிவாதத்தால்—அவனை வளர்ப்பதிலே கண்ட தொல்லைகளால் மனம் கலங்கிப் போயிருந்த பூபதி அன்று விடியும் முன்பே ஒரு பயங்கரச் கழலில் சிக்கிக் கொண்டான்.

படுக்கையைவிட்டு எழுந்த போது அவனது குடிசை 'திகு திகு' வென்று தீப்பிடித்து எரிந்து கொண்டிருப்பதை உணர்ந்து திடுக்கிட்டான். வெளியே ஓடிவர முயற்சித்தான். ஆனால் கதவு வெளிப்புறம் தாளிடப்பட்டிருந்தது! பூபதி ''ஐயோ!'' என்று அலறினான்! அதே சமயத்தில் வெளியே நின்று தீயைக் கண்டு கைகொட்டி மகிழ்ந்து கொண்டிருந்த தருமுவின் சிரிப்பொலி ரிம் காதில் விழுந்தது!

அவன் "தருமு! தருமு!! கதவைத் திற!" என்று கத்தினான்.

தீ பரவிக் கொண்டேருந்தது; கதவு திறக்கப்படவில்லை! தருமுவின் சிரிப்பும் ஓயவில்லை!

(அடுத்த இதழில் முடியும்)

✻

✻ 4-ம் பக்கத் தொடர்ச்சி

சரியோ, தவறோ ஹிந்தி கமிஷன் இரண்டு விஷயங்களிலேயே கவனம் செலுத்தியது. அரசியல் சட்டத்தின் ஷரத்துக்களை எப்படி அமுலுக்குக் கொண்டு வருவது என்பதுதான் அதன் பரிசீலனைக்கு விடப்பட்டது. ஆங்கிலத்தை அழித்துவிட வேண்டும் என்பது போன்ற பிரச்னைகளிலும் அதற்கு அதிகாரம் கொடுக்கப் படவில்லை.

ஹிந்தியைப் பரப்புவதற்கு முட்டுக் கட்டைகள் போடுவதாலும், ஆங்கிலத்தை ஒழித்துக் கட்ட அவசரமாக முயற்சிகள் செய்வதாலும் நாட்டின் ஐக்கியமும், திறமையுமே பாதிக்கப்படுமென அரசியல் கவனிப்பாளர்கள் கருதுகின்றனர்.

மொழியைப் பற்றிப் பேசும் அரசியல்வாதிகள் வரப் போகும் பொதுத்தேர்தலில் தங்கள் ஆவியைப் போக்க மொழியின் பெயரால் கிடைக்கக் கூடிய வோட்டுக்களைப் பெற்ற பிறகு புதிய பார்லிமெண்டு அமைந்ததும் ஆவன செய்வார்கள் என்று நம்பலாம்! ●

✲ சென்ற இதழ் தொடர்ச்சி

● ஒரே மகன் — அன்புச் செல்வன் — அவனது தலைக்கு விலைவைத்து விட்டான் தருக்கன் ஒருவன் — பத்தாயிரம் மட்டுமென்ன; சொத்து முழுவதையும் கந்தேனும் தருமலிங்கத்தை மீட்டுவிடத் துணியும் மருதவாணருக்கோ செய்தி யறிய முடியவில்லை. பொறுமைக் குணம் கொண்ட பொல்லாத சிற்றன்னையோ பணம் கேட்டு எழுதிய கடிதத்தை தீயுக்கல்லவா உணவாக்கி விட்டாள்!...

புராணத்திலே அக்கினி பகவான் வருவார்; அதிசயங்கள் புரிவார்; அதைப் போல அந்த அடுக்களை அக்கினிக்கு மட்டும் வாயிருந்தால்—ஐயோ, திக்கு தெரியாத காட்டில், தீயவன் ஒருவனின் பிடியிலே சிக்கி, அதோ சென்று கொண்டிருக்கிறானே, அந்த ஏதுமறியாத சிறுவன் தருமலிங்கம்—அவன் நிலையை ஊருக்கும், உலகுக்கும், குறிப்பாக மருதவாணருக்கே சொல்லியிருக்குமே!

● "காடு" என்று தனது மூன்றும் வகுப்புப் பாடப் புத்தகத்தில்தான் படித்திருக்கிறான், தருமு.

ஆனால், அந்தக் காடு இப்படிப்பட்டது — குதித்துக் கும்மாளமடிக்க மரம் கொடிகள்—நீந்திக் களிக்கக் காட்டாறுகள் பல கொண்டது என்பது அவனுக்குத் தெரியவே தெரியாது!

"ஏ, மாமா! என்னை எங்கே அழைச்சுக்கிட்டுப் போறே?"—பூபதித் தேவனின் பிடியிலிருந்து 'சடக்' என்று கையை உருவிக் கொண்டு கேட்டான் தருமு.

"தம்பி! நீங்கள் காடு மலை எல்லாம் பார்த்தது கிடையாதுல்ல; அதுக்குத்தான்..." என்றான் பூபதித் தேவன்.

அவனது பெயர்தான் பயங்கரமாக இருக்கிறது. ஆனால் பார்வைக்குப்பரமசாது அவன். அநீதிக்கு ஆக்கமளித்து ஒரு சிலர் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து கொண்டிருக்கும் போது, தான் மட்டும் வறுமையே கதி என்று வாடுவானேன்? பசியாலே பரிதவிப்பானேன்?—என்ற யோசனையின் விளைவுதான் அவனது இந்த முயற்சி! ஆகவே அவன் தருமுவிடம் கொஞ்சம் கோபமாகப் பேசக்கூடத் தயங்கினான்.

"எனக்குப் பசிக்குதே!" என்று காலையும் கையையும் உதற ஆரம்பித்து விட்டான் தருமு.

"கொஞ்சம் இங்கேயே உட்கார்ந்திரு, பழம் கொண்டு வர்றேன்!" என்று சொன்ன பூபதி, அவனை ஒரு கற்பாறையில் உட்காரவைத்தான்.

"பழமா? எனக்கு ஆப்பில் தான் பிடிக்கும்..."

"ஆப்பிலா? அது கிடைக்காதே தம்பி...மாம்பழம்...?"

"மல்கோவா மாம்பழம்னு எனக்கு சாப்பாடே வேண்டாம்..."

'அது சரி!' என்று முணுமுணுத்துக் கொண்டே நகர்ந்தான் பூபதி!

● மறுபடியும் அவன் பழத்துடன் திரும்பி வந்தபோது, திடுக்கிட்டு விட்டான்!

தருமு இருந்த இடம் காலியாக இருந்தது. "தம்பி!...... தம்பி!" என்று கத்தினான்.

அதே சமயம் சற்றும் எதிர்பாராதவண்ணம் அவன் தலையில் ஏதோ ஒன்று 'டண்' என்று தாக்கியது. "ஐயோ" என்று அலறிக் கொண்டே கீழே உட்கார்ந்தான் பூபதி. தலை 'கிர்' ரென்று சுழன்றது. மயக்கமுற்று கீழே சாய்ந்தான்.

சற்று நேரத்திற் கெல்லாம் அவன் கண் விழித்தபோது தன் முகத்தில் யாரோ தண்ணீர் தெளித்திருப்பதை உணர்ந்தான்.

"அடி பலமா பட்டுட்டுதா மாமா?..." என்று தழுதழுத்த குரலும் கேட்டது. கண்களைத் திறந்து பார்த்தான். பயம் கலந்த விழிகளுடன், கைகள் நடு நடுங்க பக்கத்தில் பரிவுடன் உட்கார்ந்து கொண்டிருந்தான் தருமு!

"நான் விளையாட்டுக்காக மரத்து மேலேயிருந்து கிளையை ஒடிச்சுப் போட்டேன். அது இப்படி யாகுமின்னு.." என்று இழுத்தான்.

பூபதிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஆனால் கள்ளமில்லா உள்ளத்தினனாகிய தருமுவை எதுவும் துன்புறுத்த அவன் மனம் துணியவில்லை. அச்சிறுவன் என்ன துரோகம் செய்தான் அவனுக்கு?...

பூபதி எழுந்தான். அவனை அழைத்துக் கொண்டு நடந்தான். குடிசை ஒன்றை அடைந்தான். அதுமுன்னேற்பாடாக அவனால் கட்டப்பட்டிருந்தது!

● இது இப்படியிருக்க, மகனையும் மர்மக் கடிதத்தையும் காணாத மருதவாணர் ஏதும் செய்ய முடியாத சோகத்தில் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தார். போலீசில் புகார் செய்தால் என்ன — என்று புறப்பட்டபோது குறுக்கே நின்று தடுத்தாள் அஞ்சலை! தருமுவின்பால் அவளுக்கு ஏற்பட்டிருந்த இனம் தெரியாத வெறுப்பு அவளை அப்படிச் செய்யத் தூண்டியது. அவன் திரும்பி வராமலே போய்விட்டால்கூட நலமே என்று நினைத்தது அவளது பாழாய்ப்போன வஞ்சக நெஞ்சு!

மறுநாள்...

மருதவாணர் தனக்குத் தெரிந்த போலீஸ் இன்ஸ்பெக்டரிடமும் செய்தியைத் தெரிவித்தார்.

மருதவாணர் செயலிழந்தார்; சிந்தை இழந்தார்; புத்திர சோகம் தாங்க மாட்டாமல் புலம்பிக் கொட்டினார்.

● நடுக் காட்டில், கூரைக் குடிசையில் தருமுவுடன் தற்காலிக வாழ்க்கையைத் துவங்கிய பூபதிக்கு அடுத்தடுத்து வந்த தொல்லைகள் கொஞ்ச நஞ்சமல்ல!

சுட்டித்தனம் மிக்க தருமுவின் குறும்புச் செயல்களால் அவன் தடுமாறிப் போனான். அப்பாவைப் பார்க்க வேண்டுமென்ற அவனது பிடிவாதத்தை — அழுகையை அவன் அடக்குவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகள்......அப்பப்பா! அவனை தத்தளிக்க வைத்தன.

ஒரு நாள்...

தானே தயாரித்த உணவை சாப்பிட்ட பின்பு, பத்தாயிரம் ரூபாய் பணம் கிடைக்காவிட்டால் என்ன செய்வது?—என்ற சிந்தனையில் குடிசைக்குள் ஆழ்ந்து கிடந்தான்.

அப்போது சற்றும் எதிர்பாராத வண்ணம் 'டுமீல்' என்ற துப்பாக்கி வேட்டின் சப்தம் எழும்பியது.

அலறிப்புடைத்துக்கொண்டு குடிசையைவிட்டு எழுந்து ஓடி வந்தான், பூபதி! மறுகணம் அவன் கண்களையே அவனால் நம்ப முடியவில்லை. "தருமு! என்ன இது? ஏது இது?" என்று அலறினான். ஆமாம்; அவனால் நினைத்தும் பார்க்க முடியாத கோலத்தில் தான் நின்று கொண்டிருந்தான் தருமு! அவன் கையிலே ஒரு துப்பாக்கி இருந்தது; ஏது அவனுக்கு அந்தத் துப்பாக்கி? அதையும் அவன் நெஞ்சுக்கு நேராகப் பிடித்துக் கொண்டிருந்தான்!

"தருமு...!" என்று அலறினான் அவன்.

"அசையாதே, மாமா! அடுத்த குண்டு உன் மார்புக்கு!" என்றான் தருமு! குறிபார்க்கத் தொடங்கியும் விட்டான்.

பூபதிக்கு சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. தீர்ந்தது தன் வாழ்வு—என்ற முடிவுக்கு வந்து ஏதும் புரியாமல் தவித்தான்.

அப்போது தூரத்தில் யாரோ சிலர் ஓடி வருவது நன்றாகக் கேட்டது. பூபதியின் உடல் குப்பென்று வியர்த்தது. தான் அகப்பட்டுக் கொண்டோம் என்றே அவன் எண்ணினான். ஆனால் காலடி ஓசையைக் கேட்ட தருமுவோ 'சடக்' கென்று துப்பாக்கியை கீழே எறிந்தான். ஓடிவந்து அவனது உடையை இறுகக் கட்டி அணைத்து கொண்டான்.

ஓடிவந்தவர்கள் காட்டுக்கு வேட்டையாட வந்தவர்கள். ஓரிடத்தில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த நேரத்தில் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வந்துவிட்டான் தருமு. வந்தவர்களிடமிருந்து இதை அறிந்து கொண்டான் பூபதி. ஆனால் தன்னைப் பற்றியும், தருமுவைப் பற்றியும் அவர்கள் சந்தேகப்படவில்லை என்பதை திட்டமாக உணரும் வரை அவன் பயம் நீங்கவில்லை!

இப்படியாக நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன. பத்தாவது நாளையும் பணப் பையையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் பூபதி...

ஒரு நாள்...

மலைச் சரிவு மரம் ஒன்றின் அடியில் உட்கார்ந்திருந்த பூபதியிடம் ஓடிவந்தான் தருமு! "மாமா, மாமா! அதோ தூரத்தில் பார், என்ன அது?" என்று கேட்டான்.

பூபதி கவனித்தான். ஒன்றோடொன்று உராய்ந்த காரணத்

✲ தொடர்ச்சி 10-ம் பக்கம்

விற்பனையாகிறது!

முத்தாரம்

★ அழகான முகப்பு ஓவியம்!

★ அதை விட அழகான எழுத்தோவியங்கள்!

உங்கள் இதழ்

பெற்று விட்டீர்களா?

என். சூரியநாராயணன்;
சென்னை—1

(?) கவர்னர் ஒரு மலையாளியாக இருக்கக்கூடாது என்கிறீர்களா?

இல்லை; கவர்னர் பதவியே இருக்கக் கூடாது என்கிறேம்!

(?) வரப்போகும் தேர்தலில் உங்கள் சார்பாக ஒரே ஒரு உதய சூரியன் பெட்டி மட்டும் ஜெயித்தால் என்ன செய்வீர்கள்?

சட்டசபையின் இருள் அகற்ற ஒரே ஒரு 'உதய சூரியன்'கூடப் போதுமே, தோழரே!

கே. கோவிந்தராசன்; தஞ்சை.

(?) பஞ்சசீலம் என்பது என்ன?

அவ்வப்போது வெளி நாட்டிலிருந்துவரும் தலைவர்களிடம் நேருக் குழந்தை கையெழுத்து வாங்க உபயோகிக்கும் 'ஆட்டோகிராப்' புத்தகம்தான் அது!

எஸ். எம். அனிபா; உதகை.

(?) ஒருவன் அதிகம் சிந்தித்தால் தலைச்சிறந்தவனுக வரமுடியுமா?

நிச்சயம் தலை வழுக்கை விழுந்தவனுக வர முடியும்!

கே. மாணிக்கவாசகம்; குடந்தை.

(?) "ஹங்கேரிப் பிரச்சினையும் காஷ்மீர்ப் பிரச்சினையும் ஒன்றுதான் என்று கம்யூனிஸ்ட்டுகள் கூறுகின்றனரே: அது பற்றி உங்கள் கருத்து என்ன?

ஹங்கேரி ஒரு தனி நாடு; காஷ்மீர் அப்படியல்லவே!

எல். கோலப்பன்; நாகர்கோவில்.

(?) வினேபா பாவேயைப்போல் நேருவும் காஷ்மீரத்திலிருந்து துவங்கி கால் நடையாகவே தேர்தல் பிரச்சாரம் புரிந்தால் என்ன நடக்கும்?

அடுத்த பொதுத் தேர்தலுக்குத்தான் அவர்கள் தமிழகம் வந்து சேர முடியும்!

சேரலாதன்; உறையூர்.

(?) நேருவின் வாரிசு என்ன?

அவர் விட்டுச் சென்ற நாத்தழும் பேறிய வாசகங்கள்தான்!

சோமசுந்தரம்; மாயவரம்.

(?) பாகிஸ்தானில் இப்போது என்ன நடக்கிறது?

காங்கிரஸ் கட்சிக்குள்ளே நடப்பது—அதாவது குழப்பமும், பதவிப் பூசலும்தான்!

பி. சொக்கலிங்கம்; தில்லை.

(?) சோஷலிசம் என்பது என்ன?

அது ஒரு குல்லாய்; அது எல்லோருடைய தலைக்கும் சரிப்பட்டு வரும்—என்று ஒருவர் சொல்லியிருக்கிறர்!

ஏ. அக்கீஸ்; அகண்டநல்லூர்.

(?) பக்தி: ஒழுக்கம்—விளக்கம் தருக!

இரண்டும் இரு துருவங்கள். ஏனெனில் ஒழுக்கமில்லாத கடவுளர்கள் மீது பக்தி செலவிடப்படுகிறதே; அதனுல்தான்!

எஸ். கோதண்டராமன்; மாயூரம்.

(?) குருஷேவும் புல்கானினும் என்ன செய்து கொண்டிருக்கிறர்கள்?

ஸ்டாலினின் பெயரை அழித்தெடுத்த 'ரப்பரால்' ஹங்கேரியை அழித்துக் கொண்டிருக்கிறர்கள்!

(?) ஹங்கேரியில் பதவிக்கு வந்த நாகி என்னவானுர்?

'நகி'யாகி விட்டார்; பாவம்!

வி. கோபாலகிருட்டினன்;
பொன்மலை

(?) இந்த ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேறுவதற்குள் 'ரேஷன்' முறைகள் ஏதாவது வருமா?

வராது; ஆனுல் பட்டினிகிடக்க வேண்டுமென்று பேசியிருக்கிறர்கள். கல்கத்தா காங்கிரசில் பேசிய அமைச்சர்கள்!

பக்கிரிசாமி; நாகை.

(?) பண்பு என்பது என்ன?

அது ஒரு ஒற்றைபடிப்பாதை! நடந்து வருவது கஷ்டம்; ஆனுல் அதில் சென்றுல் நிச்சயம் பாதுகாப்போடு கெல்லுமிடத்துக்குப் போய்ச் சேர முடியும்.

❋ 9-ம் பக்கத் தொடர்ச்சி

பிறந்திருக்கிறேம்-என்றுநினைக்கும் அவர்கள் நம்பாசை காரணம்! அந்தக் கூடாரத்திலே பெருந்தன்மைக்கு ஏற்பட்டு விட்ட பஞ்சம் காரணம்! பழி கூறித் திரியும் பண்புதான் காரணம்!

—இவ்வளவு தீய குணங்களையும் கொண்டவர்கள் கடைசியில் இட்லரைப்போல், முசோலினியைப்போல் எரிந்து, தீய்ந்து முடிவில் பிடி சாம்பலாகி விடுவோம் என்று அவர்கள் எண்ணுமல் இருப்பதுதான் காரணம்!

—இதைத்தான் பொது மக்கள் தெரிந்து கொண்டு விடாதபடி மறைக்கப் பார்க்கிறர்கள் மானங் கெட்டவர்கள்!

பாவம்; அவர்களுடைய பேதமைக்காகப் பரிதாபப்படுவோம்!

—மா.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட் ரோடு சென்னை-6.